# நன்னெறிக் கதைகள்

துணைப்பாட நூல்

( ஏழாம் வகுப்பு )

பதிப்பாசிரியர் :

வித்துவான் இரா. கீதாச்சாரி

பிரசுரகர்த்தர் :

ராஜா ராம்சந்தர் & கம்பெனி,

520, திருவல்லிக்கேணி ஹைரோடு, சென்னை-5.

முதற் பதிப்பு—1966

600 008

உரிமை பிரசுரகர்த்தர்களுடையது.

புதிய பாடத்திட்டப்படி தயாரிக்கப்பெற்றது.

Paper used: 10·9 kg. D. C. White Printing.

விலை 95 காசு.

ராஜா ராம்சந்தர் பிரஸ்,
4, நல்லதம்பி முதலி தெரு, சென்னை-5.

# முகவுரை

திருக்குறள் ஒரு சிறந்த நீதி நூல். அந்நூற் கருத்துக்களைக் கதையின் மூலம் மாணவ மாணவிகட்குப் புகட்டுதல் ஒரு நல்ல முறையாகும். அம்முறைக்கிணங்கவே, இந்நூலில் திருக்குறள் பாக்கள் சிலவற்றின் கருத்துக்கள் முன்னர் விளக்கப்பட்டு, அக்குறட் பொருளை விளக்க வல்ல கதையும் கொடுக்கப்பட்டுள்ளது.

இத்தகைய நீதிகளும், கதைகளும் நம் சிறுவர் சிறுமியர்களுக்கு உதவக்கூடும் என்ற எண்ணத்துடன் இந்நூல் வெளி வருதலின், பள்ளிக்கூட அதிகாரிகளும், ஆசிரியர்களும் இதனைப் பெரிதும் ஆதரிப்பார்கள் என்று நம்புகிறேன்.

ஆசிரியர்

# பொருளடக்கம்


| எண் | பொருள் | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | பெரியோர்களைப் போற்று | ... | 5 |
| 2. | ஏற்பது இகழ்ச்சி | ... | 11 |
| 3. | கொல்லற்க | ... | 17 |
| 4. | பொய் கூடாது | ... | 23 |
| 5. | பணிவு | ... | 31 |
| 6. | கேட்டுத் தெளிக | ... | 38 |
| 7. | உலகுக்கு முதல்வர் கடவுள் | ... | 44 |
| 8. | இல்லை என்னுது ஈக | ... | 53 |
| 9. | செய்ந்நன்றி மறவாமை | ... | 63 |
| 10. | தோன்றின் புகழொடு தோன்றுக | ... | 70 |
| 11. | அரசன் கடமை | ... | 80 |
| 12. | உயர்ந்த எண்ணமே உன்னத எண்ணம் | ... | 90 |

# 1. பெரியோர்களைப் போற்று



ஐயப் படாஅது அகத்தது உணர்வானைத்
தெய்வத்தொடு ஒப்பக் கொளல்.

மனிதர்களுள்ளும் சிலர் மாணிக்கங்களாக உள்ளார். அவர்களை மாணிக்கங்கள் என்று கூறுவதற்குப் பதிலாக தெய்வங்கள் என்று கூடச் சொல்லி விடலாம். ஆனால் யாரைத் தெய்வமாகக் கொள்ளலாம் என்பனபோன்ற சந்தேகங்கள் வரக்கூடும். இந்தச் சந்தேகங்

களைச் சுலபமாகத் தீர்த்துக் கொள்ளுவதற் குரிய வழியினைத் திருவள்ளுவர் வெகு அழ காகக் கூறுகின்ருர். அவர் கூறுவதாவது: "எவன் ஒருவன் பிறன் ஒருவனுடைய மனத் தில் நிகழும் நிகழ்ச்சிகளை, எண்ணிய எண் ணங்களை எந்தவிதமான சந்தேகமும் இல்லா மல் உறுதிப்பாட்டுடன் உணர்கின்ருனே, அவனைத் தெய்வத்திற்குச் சமானமானவன் என்பதும், உலகத்தாருக்கும் அத்தகைய வனைத் தெய்வத்திற்குச் சமமாகக் கொள்ளுங் கள் என்றும் கூட வற்புறுத்திக் கூறுகிருர். இதற்கு உதாரணமாகத் திருநாவுக்கரசரைக் கொள்ளலாம்.

திருநாவுக்கரசர் ஒரு சிறந்த சிவனடியார். இவருக்கு அப்பர் என்ற பெயரும் உண்டு. இவர் ஊர் ஊராகச் சென்று அவ்வவ்வூரில் உள்ள சிவபெருமான் ஆலயத்தில் தேவாரப் பாடல்களைப் பாடி இறைவனை வணங்கி வருவார். இப்படி வணங்கிக்கொண்டு வருப வர் திருப்பழனம் என்ற தலத்தை வணங்கி விட்டு, திங்களூர் என்னும் இடத்திற்கு வந்து சேர்ந்தார்.

திங்களூரில் அப்பூதி அடிகளார் என்ற ஒரு அந்தணர் வாழ்ந்து வந்தார். அவரும் சிறந்த சிவனடியார்; திருநாவுக்கரசரையே தெய்வமாக எண்ணியவர். அவர் திருநாவுக்கரசரைக் கண்டதே கிடையாது. ஆனல் திருநாவுக்கரசருடைய அருமை பெருமைகளையும், பக்தி மேம்பாட்டையும் பற்றிக் கேள்வியுற்றிருந்தார். இந்தக் கேள்வி மூலம் அப்பரிடத்தில் அப்பூதியார் பேரன்பு கொண்டிருந்தார். இந்த அன்பு காரணமாகத் தம் வீட்டில் உள்ள எல்லாப் பொருள்களுக்கும் திருநாவுக்கரசு என்ற பெயரை அமைத்தே அழைத்து வந்தார். இதோடு நில்லாமல், தாம் ஒரு தண்ணீர்ப் பந்தல் வைத்திருந்தார். அதற்கும் திருநாவுக்கரசு தண்ணீர்ப் பந்தல் என்று பெயர் வைத்திருந்தார். இந்தத் தண்ணீர்ப் பந்தலைத் திருநாவுக்கரசர் வந்து அடைந்தார். தம்முடைய பெயர் தண்ணீர்ப் பந்தலுக்கு வைத்திருப்பதைக் கண்டார். அங்குள்ளவர்களைப் பார்த்து, "இந்தத் தண்ணீர்ப் பந்தல் யாரால் வைக்கப்பட்டது?" என்பதைக் கேட்டறிந்தார். அங்கிருந்தவர்கள், "இந்தத் தண்

ணீர்ப் பந்தல் அப்பூதி அடிகள் என்னும் அந்தணப் பெரியாரால் வைக்கப்பட்டது," என்றனர். அதன்பின் அப்பர் அப்பூதியார் வீட்டை நோக்கிப் புறப்பட்டு அவர் இல்லத்தை அடைந்தார்.

அப்பூதியார், அப்பரது சைவ வேடப் பொலிவைக் கண்டு, நல்ல முறையில் வர வேற்ருர். அப்பூதியாருக்குத் தம் வீட்டிற்கு வந்தவர், தாம் எந்நேரமும் போற்றிக்கொண் டிருக்கும் திருநாவுக்கரசர் என்பது தெரியாது. இந்த நிலையில் அப்பர் அப்பூதியாரைப் பார்த்து, "அன்பரே! நீர் வைத்துள்ள தண் ணீர்ப் பந்தலில் உம் பெயரை எழுதாமல், வேருெருவர் பெயரை எழுதக் காரணம் என்ன?" என்று கேட்டார். அப்பூதியாருக் குக் கோபம் வந்தது. அவர், "ஐயா, நீர் சிவ னடியார் வேடத்தில் இருந்தும், சிவபெருமா ஞல் ஆட்கொள்ளப்பட்ட அப்பர் பெருமான் பெயரை யான் வைத்திருக்க, வேருெரு பெயர் என்று கூறுகிறீரே! நீர் அப்பெயரை வாயி ஞலும் கூடக் கூறவில்லையே!" என்று கடிந்து கொண்டார். அந்த நிலையில் அப்பர் மிகவும்

பணிவுடன், "அந்தத் திருநாவுக்கரசு நான் தான் !" என்றனர். அப்பூதியார் பேரானந்தம் கொண்டார். அப்பருக்கு உணவு படைக்க ஏற்பாடு செய்தார். உணவும் தயாராயிற்று.

அப்பூதியாருக்கு மூத்த மகன் ஒருவன் இருந்தான். அவன் பெயர் மூத்த திருநாவுக் கரசு என்பது. அவனை வாழை இலை கொணரு மாறு அவன் தாயார் தோட்டத்திற்கு அனுப் பினர். அங்கு அவன் பாம்பு தீண்டி இறந் தான். அம்மகன் இறந்தமையால் அப்பர் அமுது கொள்ளாமல் போய்விடுவார் என்று பயந்து, தம் மகனைப் பாயோடு மறைத்து, அப்பருக்கு உணவு படைத்தனர். அப்பர் திருநீறு அளிக்க எல்லோரையும் அழைத் தனர். அந்தச் சமயம் மூத்த திருநாவுக் கரசு வந்திலன். அப்பர் அப்பூதியாரை நோக்கி, "எங்கே மூத்த மகன் ?" என்று கேட் டார். அப்பூதியார், "இப்போது அவன் உதவ மாட்டான்," என்றார். உடனே திருநாவுக்கரசர் தம் பக்தி வன்மையால் அப்பூதியார் எந்த நினைப்போடு இதனைக் கூறினர் என்பதையும், அவர் தன் மகனை மறைத்து வைத்தமையை

யும் உணர்ந்துகொண்டு அம்மகன் மறைத்து வைக்கப்பட்ட இடத்தை அடைந்து, திருநீறு தெளித்து, சிவபெருமானை வேண்டிப் பாம்பு கடித்த விடம் நீங்குமாறு பாடல் பாடினர். அவனும் தூக்கத்திலிருந்து எழுபவன் போல எழுந்தான். எல்லோரும் இன்புற்றனர்.

## பயிற்சி வினுக்கள்

1. யாரைத் தெய்வத்திற்குச் சமமாக எண்ண வேண்டும் ?
2. அப்பூதியார் எவ்வாறு அவரைப் போற்றி வந்தார் ?
3. அப்பூதியாருக்கும் அப்பருக்கும் நடந்த உரையாடல் யாது ?
4. மூத்த திருநாவுக்கரசு எப்படி இறந்தான் ? பிறகு எப்படி உயிர் பெற்ருன் ?

## கட்டுரைப் பயிற்சி

1. திருநாவுக்கரசருக்கும் அப்பூதி அடிகளுக்கும் நடந்த உரையாடலைத் தொகுத்து வரைக.
2. "ஐயப் படாஅது அகத்தது உணர் வானை" என்னும் குறள் திருநாவுக்கரசருக்கு எங்ஙனம் பொருந்தும் என்பதைப் விளக்கி ஒரு கட்டுரை வரைக.

## 2. ஏற்பது இகழ்ச்சி



'ஆவிற்கு நீர்' என்று இரப்பினும், நாவிற்கு
இரவின் இளிவந்தது இல்.

நாயனுருக்குப் பிறரிடம் சென்று ஒரு பொருளைக் கேட்பது மிக மிக இழிந்தது என்பது கருத்து. அதனை ஓர் உதாரணம் மூலமாகவும் நன்கு எடுத்து விளக்கி யுள்ளார். அதாவது ஒரு பசு தண்ணீர் வேட்கைக் காரணமாகச் சோர்ந்து கிடக்கின்றது என்ருலும், அதன் சோர்வைப் போக்கும் பொருட்டு நீர் வேண்டும் என்று பிறரைப்

போய்க் கேட்பது நாக்கிற்கு இழிவாகும் என்பதாம். இதனுல், அவர் கூற விரும்பு வது 'பசுவுக்கு' என்ற காரணம் காட் டியும் நீரைக்கூடப் பிறரிடம் சென்று கேட்கக் கூடாது என்பதாம். இந்தக் கொள்கைப்படி வாழ்ந்த பெரியார் ஒருவர் நந்தம் நாட்டில் இருந்திருக்கின்றனர்.

வட வெள்ளாற்றுக்குத் தென்பக்கமாக இருக்குவேளூர் என்னும் ஊர் உள்ளது. அவ் வூர் நல்ல நீர்வளம் பொருந்தியது. அதனுல் சோலைகளைக் கொண்டு விளங்கியது. பலாப் பழங்கள் பழுத்துத் தேனைப் பொழிந்து கொண்டிருந்தன. வயல்கள் நல்ல நெற்பயிர் களைக் கொண்டு செழித்து வளர்ந்தன.

இத்தகைய இருக்குவேளூர் என்னும் பதி யில் பெருஞ்செல்வர் ஒருவர் வாழ்ந்துவந்தார். அவர் தில்லை நடராசப்பெருமான் திருவடி களில் நிரம்பிய அன்புடையவர். அவர் தாம் பெற்ற செல்வத்தைக் கொண்டு புண்ணியம் தேட மனம் கொண்டார். அதன் பொருட்டுக் கோவில்களில் விளக்கு எரிக்கும் தொண்டில்

ஈடுபட்டு வந்தார். கோவில்கள் தோறும் பல விளக்குகள் எரித்து வந்ததால் அவர் செல்வம் மெல்ல மறைந்தது. அவரை வறுமை வந்து சூழ்ந்து கொண்டது. என்றாலும் தாம் கொண்ட திருத்தொண்டை நிறுத்தாமல் வீட்டில் உள்ள பொருள்களை எல்லாம் விற்றுத் தம் தொண்டைத் தடையின்றிச் செய்து வந்தார். எத்தனை நாட்களுக்குத்தான் வீட்டுப் பொருள்கள் உதவும்? அவையும் குறைந்தன. என்றாலும் அவர் தொண்டினை நிறுத்தவில்லை; தமக்குப் பொருள் தேவை என்று பிறரிடம் சென்று யாசிக்கவும் இல்லை.

அவர் நாயனார் குறட் கருத்தை நன்கு அறிந்தவர். நாயனார் தாம் பசுவுக்கு நீர் வேண்டும் என்று கூடப் பிறரைக் கேட்கக் கூடாது என்று சொல்லி இருக்கிறாரே என்பதை அறிந்து எவரையும் ஒன்றும் கேளாது கணம் புற்களை விற்று அதனால் கிடைத்த பொருளைக் கொண்டு தாம் விளக்கிடும் பணியைச் செவ்வனே செய்து வந்தார்.

இப்பெரியார் கணம் புல்லை விற்றுத் தம் திருத்தொண்டைச் செய்து வந்த காரணத் தால் அவரைக் கணம்புல்லர் என்று எல்லோரும் கூறி வந்தனர்.

ஆண்டவன் மனக்குறிப்பை நம்மால் அளவிடமுடியுமா? அவர் எதையும் ஆக்கவும் செய்வார்; அழிக்கவும் செய்வார். ஆகவே, கணம்புல்லருடைய உண்மை அன்பை உலகு அறியும் பொருட்டுக் கணம் புற்கள் ஒரு நாள் விலையாகாமல்படி ஆண்டவன் செய்துவிட் டார். கணம் புற்கள் விலையாகவில்லை என்றால், கணம்புல்ல நாயனருக்குப் பொருள் கிடைக் காது. பொருள் கிடைக்கவில்லை என்றால் திரியும் எண்ணெயும் வாங்கமுடியாது. இவை இல்லையானல் திருவிளக்கு எரிக்க முடியாது. இந்த நிலையில் கணம்புல்லர் என்ன செய்தார் தெரியுமா? சிறிதும் மனம் தளர்ந்திலர். தாம் அறுத்து வந்த கணம் புற்களையே திரிபோலத் திரித்தார்; அகல்களில் வைத்தார்; எரித்தார். விளக்குகள் யாவும் சிவபெருமான் திருவரு ளால் முன்னைவிட ஒளியுடன் எரியத் தொடங் கின. ஆனல் அந்தச் சமயத்திலும் ஒரு முட்

டுப்பாடு வந்து சேர்ந்தது. அதாவது தினமும் எரிக்கும் விளக்குகளில் சிலவற்றிற்குக் கணம் புற்களும் போதாமல் போயின. ஆ! அந்தச் சமயத்திலும் கணம்புல்ல நாயனுர் என்ன செய்தார் தெரியுமா? தம் முடியைத் திரியாகத் திரித்து விளக்குகளில் வைத்து எரித்தார். இவ்வாறு கணம்புல்ல நாயனுர் புரிந்த அரிய செயலுக்காகச் சிவபெருமான் அவருக்குத் திருவருள் புரிந்தார்.

இவ்வாறெல்லாம் கணம்புல்லர் செய்ததன் நோக்கம் யாது? பிறரை அடைந்து எதையும் கேட்கக்கூடாது என்பதல்லவா!

## பயிற்சி விஞக்கள்

1. வள்ளுவர், 'ஏற்பது இகழ்ச்சி' என்பதை எப்படி விளக்குகிருர்?
2. கணம்புல்லர் என்பவர் யாவர்?
3. அவர் செய்து வந்த தொண்டு யாது?
4. அவர் தம் தொண்டு முட்டுப்படாதிருக்கச் செய்த செயல் எது?

## கட்டுரைப் பயிற்சி

1. 'ஆவிற்கு நீர் என்று இரப்பினும்' என்னும் குறள் கணம்புல்ல நாயனுருக்கு எங்ஙனம் பொருந்தும் என்பதை விளக்கி ஒரு கட்டுரை வரைக.
2. ஆண்டவன் கணம்புல்ல நாயனுரின் உண்மை அன்பை உலகுக்கு எப்படி வெளிப்படுத்திஞர் என்பதைச் சுருக்கி வரைக.

# 3. கொல்லற்க



தன்உயிர் நீப்பினும் செய்யற்க தான்பிறிது
இன்உயிர் நீக்கும் வினை.

எல்லோர்க்கும் தன் உயிரினிடத்தில் பற்று அதிகம். எதைப் பெற்றாலும் பெற லாம். இழந்த உயிரைப் பெற இயலாது. அப் படிப்பட்ட உயிரை மாய்ப்பது என்பது பெரும் பாவம்.

ஓர் இனிய உயிரை மாய்ப்பதை நல்லறிவுடையோர் ஒருக்காலும் நினைக்கமாட்டார்கள். அவர்களுக்கு உயிரினுடைய அருமை பெருமை தெரியும். கொன்ற உயிரை மீண்டும் பெற்றுத்தர இயலாது என்பதும் தெரியும். இவ்வளவும் தெரிந்த அறிவுடைய நல்லோர் பிற உயிரை மாய்ப்பதை விடத் தம் உயிரை வேண்டுமானாலும் விட்டுவிட முன் வருவர். ஏன்? அப்படித் தம் உயிரையும் விட்டிருக்கின்றனர். அப்படி யார் விட்டிருக்கின்றனர் என்பதைக் கூறுகிறேன் கேளுங்கள்.

சோழ நாட்டின் தலைநகர்களுள் திருவாரூர் என்பதும் ஒன்று. அந்நகரில் மனுநீதி கண்ட சோழன் என்பவன் தன் குடிகளுக்குத் தன்னாலும், தன் பரிசனங்களாலும், திருடர்களாலும், மிருகங்களாலும், பகை அரசர்களாலும் எந்தவிதமான பயமும் இல்லாமல்படி காத்து அரசு செய்துவந்தான். அவன் குடைக்கீழ் குடிமக்கள் இன்பமாக வாழ்ந்து வந்தனர். குடிமக்கள் தம் குறைகளை நேரே சென்று சொல்லிக் கொள்ளத்தக்க வசதிகளை அவன்

ஏற்படுத்தி இருந்தான். தன் அரண்மனை வாசலில் ஒரு பெரிய மணியைக் கட்டி இருந்தான். குறைகூற விரும்புவர் நேரே சென்று அம்மணியை அடித்ததும், அவ் வோசையினைக் கேட்டு, அரசன் வந்து குடி மக்களின் குறைகளை நேரில் கேட்டு அவற்றைத் தீர்ப்பான். இத்தகைய குணம் வாய்ந்த அரசனுக்கு ஒரு மகன் இருந்தான். அவன் பெயர் வீதிவிடங்கன் என்பது.

ஒருநாள் வீதிவிடங்கன் தன் தேர் மீதிவர்ந்து திருவாரூர்த் தியாகராசப் பெருமானைத் தரிசிக்க அரசவீதி வழியே சென்று கொண்டிருந்தான். தன்னைச் சூழ பணியாளர்கள் கோவில் பூசைக்கு வேண்டிய பொருள்களைத் தாங்கிச் சென்றனர். மந்திரிமார்களும் பிரதானிகளும் வந்து கொண்டிருந்தனர். இவ்வாறு வீதிவிடங்கன் மிகவும் குதூகலத்தோடு போய்க்கொண்டிருக்கையில், ஒரு கன்று எவருடைய கண்ணுக்கும் புலப்படாமல் துள்ளிவந்து அரசகுமாரன் ஏறிவந்த தேர்ச்சக்கரத்தில் அகப்பட்டு இறந்துவிட்டது.

கன்றைக் காணாத தாய்ப் பசு, தன் கன்றே தேர்க்காலில் அகப்பட்டு இறந்ததை அறிந்து, துக்கித்து நேரே அரசனுடைய அரண்மனைக்குச் சென்று அங்குக் கட்டித் தொங்கவிடப்பட்டிருந்த ஆராய்ச்சிமணி யின் கயிற்றைத் தன் வாயால் இழுத்து அசைத்து ஓசையை எழுப்பியது. இவ்வோசை யைக் கேட்ட மன்னன் ஓடோடியும் வந்து பார்த்தபோது, பசு தன் கண்களில் நீரைச் சிந்திக் கொண்டிருந்த நிலையினைக் கண்டு, "நடந்தது யாது?" என்று அங்கு வந்தவர் களைக் கேட்டான். அங்கு வந்தவர்கள் நடந்ததை நடந்தபடி நவின்றனர். அதற்குள் மந்திரியும் அங்கு வந்து, "அரசே! எப்படியோ இது நடந்துவிட்டது. இது உம் திருமகன் வேண்டுமென்று செய்த செயல் அன்று," என்று கூறினான்.

அரசன் மனுநீதி கண்டசோழன், மந்திரி சொன்னபடி செய்ய ஒப்புக்கொள்ளவில்லை. பசு படும் துயரத்தைப்போலத் தானும் துன்புறுதல்தான் பசுவின் மனதைச் சாந்தப் படுத்தியதாகும் என்று எண்ணினான். அதன்

பொருட்டு மந்திரியை நோக்கினான். "மந்திரி! இந்த மாதிரியான நிகழ்ச்சி என்றும் நம் சோழர் பரம்பரையில் நடந்ததில்லை. பசு, தன் துயரை அரசனிடம் தெரிவிக்கவேண்டும் என்ற உணர்ச்சியுடன் நமது அரண்மனை ஆராய்ச்சிமணியை அசைத்திருக்கிறது. ஆகவே, இப்பசு அறிவுடைய பசுவாகும். அதன் துயரம் தீரவேண்டுமானால், அது எப்படித் தன் அருமைக் கன்றை இழந்துத் துன்புறுகிறதோ, அதுபோல யானும் என் அருமை மகனை இழந்துத் துன்பப்பட வேண்டும். ஆகவே, நீர் சென்று எந்த இடத்தில் இப்பசுவின் கன்று இறந்ததோ, அந்த இடத்தில் என் மகனைக் கிடத்தி அவன் மார்பில் தேரைச் செலுத்திக் கொன்றுவிடுக," என்று கட்டளை இட்டான். இக்கட்டளையைக் கேட்ட மந்திரி அரச குமாரனைக் கொல்லத் துணியாமல் தன் உயிரையே மாய்த்துக் கொண்டான்.

### பயிற்சி வினுக்கள்

1. எப்படிப்பட்ட செயலைச்செய்தல் கூடாது?

2. பிற உயிர்களை ஏன் கொல்லுதல் கூடாது ?
3. மனுநீதி கண்ட சோழன் எவ்வாறு அரசு செய்தான் ?
4. பசு ஏன் ஆராய்ச்சி மணியை அடித்தது ?
5. மந்திரி ஏன் தன் உயிரை மாய்த்துக் கொண்டான் ?

## கட்டுரைப் பயிற்சி

"தன்னுயிர் நீப்பினும் செய்யற்க" என்னும் குறள் மந்திரியின் வரலாற்றில் எங்ஙனம் பொருந்தும் என்பதை விளக்கி ஒரு கட்டுரை வரைக.

# 4. பொய் கூடாது



பொய்யாமை பொய்யாமை ஆற்றின், அறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று.

மக்கள் உலகில் மேற்கொள்ள வேண்டிய குணங்கள் பல. ஆனல், அப்பல குணங்களை யும் மேற்கொண்டு நடப்பது கடினமாகத் தான் இருக்கும். என்ருலும், சில குணங்களை மேற்கொண்டு நடந்தாலும் பெருமைக்கும்

புகழுக்கும் காரணமாகும். ஏன் ? ஒரு சிறந்த குணத்தை மேற்கொண்டு அதிலிருந்து தவருது நடந்தாலும் போதுமானது. அக் குணம் பிற நற்குணங்களை எல்லாம் கூட்டி வைத்தற்குத் துணை செய்தாலும் செய்யலாம். அத்தகைய நற்குணங்களுள் ஒன்று பொய் பேசாதிருத்தலாகும். இந்தப் பொய் கூருமை யாகிய குணத்தை மேற்கொண்டால் அறங் களைக்கூடச் செய்யாமல் போயினும் குறை யாகக் கூறப்படமாட்டாது. இதுவே திரு வள்ளுவருடைய கருத்துமாகும். ஆகவே, பொய்யாமையாகிய குணத்தை மேற் கொண்டு ஒழுகிய ஒருவன், வாழ்க்கையி லுயர்ந்த வரலாற்றைக் காண்போம்.

ஓர் ஊரில் மதோன்மத்தன் என்னும் பெயருடையவன் வாழ்ந்து வந்தான். அவன் பெயருக்கு ஏற்ப நன்கு கொழுத்துத் தேக பலம் உடையவனுய் இருந்தான். இவ்வளவு உடல் பலம் இருந்தும் உழைத்துச் சாப்பிட வேண்டும் என்ற எண்ணமே இல்லாமல், திருடுவதும் வழியில் போவாரை அடித்து

அவர்களிடம் உள்ளனவற்றைப் பறித்துக் கொள்வதுமான செயல்களில் ஈடுபட்டு வந்தான். வழியில் போகிறவர் கையில் ஒன்றும் இல்லாமல் போனாலும், அவர்களை நையப் புடைத்து அவர்கள் படும் துன்பத்தைக் கண்டு அவன் இன்புற்று வந்தான். இந்த விதமாகக் காலம் கழித்து வந்த அப்படிப்பட்டவனுக்கு நல்ல காலம் நெருங்கி விட்டது. ஆகவே, இவன் வழிபறிக் கொள்ளை செய்ய மறைந்திருந்த பக்கமாக ஞானி ஒருவர் வந்தனர். அவரைப் பார்த்த மதோன்மத்தன், "இவரிடம் ஏதேனும் இருந்தால் அதைப் பறிப்போம்," என்று அவர் போகும்போது குறுக்கே நின்று அவர் போக்கைத் தடை செய்தான். ஞானியார் அவனை உற்றுப் பார்த்தார். அந்தப் பார்வையே அவனது தீய குணத்தைச் சிறிது குறையச் செய்தது. பிறகு மதோன்மத்தன் ஞானியாரைப் பார்த்து, "உம்மிடம் என்ன இருக்கிறது? இருப்பவற்றை மரியாதையாக வைத்துவிட்டு மேலே போகவும்," என்று அதட்டிய குரலில் கேட்டான். ஞானியார் அந்த அதட்டலுக்கெல்லாம் பயந்தவரா!

"தம்பி, நானே துறவி. என்னிடம் என்ன இருக்கும்? என்னிடம் இந்த உண்கலம், காவி ஆடை, கமண்டலம் தவிர வேறு ஒன்றும் இல்லை. நான் உன்னைச் சில கேள்விகள் கேட்கப் போகிறேன். அவற்றிற்குப் பதில் சொல். நீ ஏன் உழைத்துச் சாப்பிடக் கூடாது? திருடுவது நல்லதா? இப்படிச் செய்வது கூடாது," என்று கூறினர்.

மதோன்மத்தன் துறவியை நோக்கி, "நீங்கள் என்ன சொன்னாலும் கேட்கிறேன். ஆனால், திருடாமல் மட்டும் என்னால் இருக்க முடியாது. அது எங்கள் பரம்பரைத் தொழில்," என்றனன். உடனே துறவி அவனை நல்வழிப்படுத்த, "அப்பா, உன் விருப்பப்படியே திருடு. ஆனால் நான் சொல்லும் ஒரே செய்தியை முக்கியமாகக் கவனத்தில் வைத்துக்கொள். அதனை எந்தச் சமயத்திலும் கைவிட்டு விடாதே. அதாவது, பொய்மட்டும் எங்கும் எப்போதும் யாரிடத்தும் சொல்லாதே," என்றனர். திருடனும் அப்படியே அந்தக் குணத்தை மேற்கொள்வதாக வாக்குக் கொடுத்தனன். துறவியும் போய்விட்டனர்.

தொட்டில் பழக்கம் சுடுகாடு போகும் வரையில் இருக்கும் அல்லவா? அந்த முறைப் படி ஒருநாள் திருடன் அரசனது அரண்மனை யில் திருடத் தீர்மானித்தான். அத் தீர்மானப் படி நள்ளிரவு வரும் வரையில் காத்திருந்து நள்ளிரவு வந்ததும் திருடப் புறப்பட்டான்.

அவ்வூர் மன்னன் நாள்தோறும் மாறு வேடம் பூண்டு நகர் சோதனை வருவது வழக் கம். அவ்வழக்கப்படி மாறுவேடத்துடன் வந்த அரசன் திருடனைப் பார்த்துவிட்டான். பார்த்ததும், "நீ யாவன்? இந்த இரவில் எங்கே போகிறாய்?" என்று கேட்டான். மதோன் மத்தன் தன் வாக்கை நிறைவேற்ற, அதாவது உண்மையே பேச, தான் ஒரு திருடன் என்றும், அரசர் வீட்டில் திருடப் போவதாக வும் கூறினான். அரசனுக்கு இதைக் கேட்க ஆச்சரியமாகப் போய்விட்டது. 'என்ன! திருட வருபவன் உண்மை கூறினானே! ஆகவே இவன் உண்மையாளனாக இருக்க வேண்டும்,' என்று அரசன் எண்ணித் திருட னுடைய உண்மைக் குணத்தைச் சோதிக்க, "சரி, நானும் ஒரு திருடன்தான். என்னுடன்

மெல்ல வா; நிதிச்சாலை இருக்கும் இடத்தைக் காட்டுகிறேன்," என்று கூறி நிதிச்சாலையைக் காட்டினான். அங்கு ஒரு பெட்டியில் மூன்று இரத்தினங்கள் இருந்தன. அவற்றுள் இரண்டை அத்திருடன் திருடிக்கொண்டு, ஒன்றை மாறுவேடத்துடன் இருந்த அரசனுக் குக் கொடுத்து விட்டு, மற்றொன்றைத் தான் எடுத்துக்கொண்டு போய்விட்டான். அரசன் அவன் யார் என்றும், எங்கு இருப்பவன் என்றும் தெரிந்துகொண்டு அரண்மனைக்குச் சென்றான்.

அடுத்த நாள் நிதிமந்திரி நிதிச்சாலை யைத் திறந்து பார்க்கையில், மூன்று இரத்தி னங்களில் இரண்டு களவாடப்பட்டதை உணர்ந்து, மூன்றாவது இரத்தினத்தைத் தான் திருடிக்கொண்டு, "மூன்றும் களவாடப்பட் டன," என்று அரசனிடம் பொய் கூறினன். அரசன் நிதிமந்திரியின் திருட்டை வெளிப் படுத்த, இரவு திருடிய திருடனை அழைத்து வரச் சொல்லி, அவனைப் பார்த்து நேற்று இரவு நடந்தவற்றைக் கூறுமாறு செய்தான். அப்படியே அவன் கூறித் தான் திருடிய இரத்

தினத்தை அரசன் முன்பு வைத்தான். அரச னும் தன்னிடம் திருடன் கொடுத்த இரத்தி னத்தைத் தன் எதிரே வைத்தான். பிறகு சபையோர்களைப் பார்த்து, "மூன்ருவது இரத் தினம் யாரிடம் இருக்கவேண்டும்?" என்று கேட்டதும், எல்லாரும் பெருங் கூச்சலுடன் "நிதி மந்திரியிடம்தான் அது இருக்கவேண் டும்," என்று கூறினுர்கள். உடனே அரசன் நிதி மந்திரியை அப்பதவியினின்றும் விலக்கி, மதோன்மத்தனை அப்பதவியில் அமர்த்தினன். பார்த்தீர்களா, உண்மை பேசுவதால் பெறப் படும் பலனை!

### பயிற்சி வினுக்கள்

1. மதோன்மத்தன் என்பவன் யாவன்? அவனைப்பற்றிச் சில வரிகள் எழுதுக.

2. துறவி மதோன்மத்தனைக் கேட்ட கேள்விகள் யாவை?

3. மதோன்மத்தன் ஞானியாருக்குக் கொடுத்த வாக்குறுதி யாது?

4. அரசன் நகர்ச்சோதனை வந்தபோது நடந் தது யாது?

5. நிதி மந்திரியின் திருட்டு எப்படி வெளி யானது ?

## கட்டுரைப் பயிற்சி

மதோன்மத்தன் தன் வாழ்க்கையில் உயர்ந்த விதத்தைச் சுருக்கி வரைக.

# 5. பணிவு



எல்லார்க்கும் நன்ரும் பணிதல்; அவருள்ளும்
செல்வர்க்கே செல்வம் தகைத்து.

பணிவு என்பது வணங்கிப் போதல் என்பதாம். 'இப்பணிவு என்னும் குணம் ஏழைகளிடத்தும், எளியவர்களிடத்தும், சிறியவர்களிடத்தும்தான் இருக்கவேண்டிய குணம்; பெரியவர்களிடத்திலும், பணக்காரர்களிடத்தி

லும் இருக்கவேண்டியதில்லை. ஏனெனில் தம் பணம் காரணமாக அவர்கள் யார்க்கும் பணிய வேண்டிய சந்தர்ப்பம் கிடையாது," என்று குதர்க்கம் செய்யக்கூடாது. பணிவு என்னும் பண்பு யாரிடத்தில் அமைதல் வேண்டும், யாரிடத்தில் அமைதல் வேண்டா என்று நம் பெரியோர்கள் வரையறுக்கவில்லை. வள்ளுவர், பணிவு யாருக்கு உரியது என்பதை நமக்கு உணர்த்தும்போது, "பணிவு என்னும் பண்பு எல்லோரிடத்திலும் இருக்கவேண்டியது சிறப் பாகும்," என்று கூறுகிறார். அந்த அளவில் கூட அவர் கூறித் தம் கருத்தை முற்றுவிக்க வில்லை. இப்பணிவாகிய குணம் எல்லோருக் கும் பொதுவாக இருக்கவேண்டிய குணம். என்றாலும், சிறப்பாகச் செல்வரிடத்தில் அமைந்துவிடுமானால், அது அவர்களுக்கு உள்ள செல்வச் சிறப்புடன் இக்குணச் செல்வ மும் அமைந்து அவர்கட்குப் பெருமை தரும் என்றும் கூறி முடிக்கின்றார். இவ்வாறு பெருஞ் செல்வராய், பேரரசராக இருந்த சேரமான் பெருமாள் நாயனார் பணிவுப் பண்பை மேற்கொண்டவர்.

நாயன்மார்கள் அறுபத்துமூவர் என்று கூறுவர். அவர்களுள் ஒருவர் சேரமான் பெருமாள் நாயனர் என்பவர். இவர் சிவ பெருமான் அருளால் அரச பொறுப்பை ஏற்றவர். இவருக்கு அரசராக அரசு புரிவ தைப்பற்றி மகிழ்ச்சி கிடையாது. ஏனெனில், அரசராக இருப்பவர் தாம் மட்டும் இன்பமாக வாழ்ந்து தம் ஆட்சியின் கீழுள்ள குடிமக் களின் துன்பத்தையோ, மற்றுமுள்ள உயிர்ப் பொருள்களின் துன்பத்தையோ, கவனியாது அரசபாரம் ஏற்று அரசாள்வதில் பயனில்லை என்பது இவரது எண்ணம். ஆகவே, சிவ பெருமானிடம் தாம் அரசு ஏற்று நல்லமுறை யில் அரசு புரியவேண்டுமானல், அஃறிணை உயிராயினும் சரி, உயர்திணை உயிராயினும் சரி, அவ்வுயிர்கள் கூறுவனவற்றையும் பேசிக் கொள்வனவற்றையும் உணர்ந்து அவற்றின் தேவைகளை முடித்து வைக்கும் வன்மை தமக்கு ஏற்பட்டால், அரசபாரத்தை ஏற்று நடத்துவதாகக் கூறினர். அப்படியே சிவ பெருமானும் பிற உயிர்கள் கூறுவனவற்றை அறிந்துகொள்ளும் ஆற்றலை இவருக்குத் தந்

தனர். அதனால் இவருக்குக் கழறிற்று அறிவார் நாயனார் என்ற பெயரும் ஏற்பட்டது. கழறிற்று அறிவார் என்பதன் பொருள், சொன்னதைத் தெரிந்துகொள்வார் என்பதாம். இப்படிப்பட்டவர் ஆட்சி செய்யும் நாட்டில் குடிமக்களுக்கோ உயிர்ப்பொருள்களுக்கோ துன்பம் இருக்குமா? ஒருக்காலும் இருக்காது. இந்த முறையில் அரசு செய்து வந்தார் சேரமான் பெருமாள் நாயனார்.

ஒருநாள் சேரமான் பெருமாள் நாயனார் யானைமீது அமர்ந்து பவனி வந்து கொண்டிருந்தார். அவர் எதிரே ஒருவன் தான் வெளுக்கவேண்டிய ஆடைகளுக்குத் தேவையான உழமண்ணை மூட்டையாகக் கட்டிக்கொண்டு நடந்து வந்துகொண்டிருந்தான். அவன் புறப்படும்போது மழையில்லை. நல்ல வெயில் காய்ந்துகொண்டிருந்தது. ஆனால், அவன் சிறிது தூரம் நடந்து வந்தபிறகு மழை பெய்தது. அம்மழை சிறிது நேரத்திற்கெல்லாம் நின்றுவிட்டது. மறுபடியும் வெயில் காயத் தொடங்கியது. அந்தச் சிறிது நேரம் பெய்த மழை அவனுடைய

உடம்பை நனைத்தது; அவன் தலையில் இருந்த உழமண்ணையும் சிறிது கரையச் செய்தது. கரைந்த மண் அவன் உடம்பில் ஒழுகவும் தொடங்கியது. அவன் இவற்றையெல்லாம் பொருட்படுத்தாமல் நடந்துகொண்டே வந்தான். மழை நின்று, வெயில் காய்ந்தமையால் அவன் மீது படிந்த உழமண் உலர்ந்து போயிற்று. உழமண் வெண்ணிறமண். அது உலர்ந்ததும், அவன் உடம்பு திருநீறு பூசப் பட்ட திருமேனிபோலக் காணப்பட்டது.

இந்தத் தோற்றத்தோடு வந்த மனிதனை சேரமான் பெருமாள் நாயனர் தூரத்தே கண்டார். சேரமான் பெருமாள் நாயனருக்கு அவன் யார் என்பது தெரியாது. 'யாரோ ஒரு சிவனடியார் தம் உடல் முழுவதும் திருநீறு பூசிக்கொண்டு வருகிறர். அவர் நடந்துவரும் போது, நாம் யானைமீது அமர்ந்து வரலாமா ? இது முறையோ ?' என்று எண்ணி உடனே யானையின்மீது அமர்ந்திருந்தவர் கீழே இறங்கி விட்டனர். இதற்கு இடையில் அம்மனித னும் உழமண் மூட்டையுடன் அரசர் அருகில் வந்துசேர்ந்தான். உடனே சேரமான் பெரு

மாள் நாயனுர் அவன் அருகு சென்று, இரு கைகளைக் கூப்பி முடிசாய்த்து நின்ருர். அம்மனிதன் பயந்துபோனுன். "இது என்ன விந்தையாக இருக்கிறதே! அரசர் நம்மை ஏன் வணங்குகின்ருர்?" என்று சொல்லி நடுங்கினுன். உடனே சேரமான் பெருமாள் நாயனுர், அவனைப் பார்த்து, "நீர் சிவ வேடத்தை உமது தோற்றத்தால் நினைவுபடுத்தினீர். ஆகவே, அத்தோற்றத்திற்கே என் வணக்கம் உரியது. நீர் வருந்தாது செல்க," என்றனர். பார்த்தீர்களா! சேரமான் பெருமாள் நாயனுர் தாம் பேரரசராக இருந்தும் பணிவு என்னும் பண்பினைப் பெற்றிருந்தமையை!

### பயிற்சி வினுக்கள்

1. பணிவு என்னும் குணத்தை மேற்கொள்ள வேண்டியவர் யார்? ஏன்?
2. சேரமான் பெருமாள் நாயனுர் யாவர்? அவர்க்குரிய மற்ருெரு பெயர் என்ன?
3. சேரமான் பெருமாள் நாயனுருக்கு ஏன் அரச பதவியில் விருப்பம் இல்லை?
4. சேரமான் பெருமாள் நாயனுருடைய பணிவு எவ்வாறு தெரிய வருகிறது?

## கட்டுரைப் பயிற்சி

"எல்லார்க்கும்" என்னும் குறளை சேரமான் பெருமான் நாயனார் வரலாற்றைக்கொண்டு விளக்கி ஒரு கட்டுரை வரைக.

# 6. கேட்டுத் தெளிக



எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும், அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு.

நாம் எவ்வளவோ அறிவுடையவர்களாக இருக்கலாம். எத்தனையோ புத்தகங்களைப் படித்தவர்களாக இருக்கலாம். ஆனால், எல்லாம் தெரிந்தவர்கள் என்று கூறிவிட முடியாது. ஆகவே, நாம் எவராயினும் எந்தப்

பொருளையாயினும் சொல்லக் கேட்டால் அதனை அலட்சியமாகக் கருதாமல் அப்படி அவர்கள் சொன்னதன் கருத்து யாது, அதன் உண்மைப் பொருள் என்ன, என்று சிந்தித்து அவ்வுண்மைப் பொருளை உணர்ந்து கொள்ள வேண்டும். அதுதான் அறிவுடைமையாகும். நமக்குப் பிறர் சொல்ல வேண்டா என்று கர்வங் கொண்டு இருத்தல் கூடாது.

கம்பர், தமிழ்க் கவிஞர்களுள் தலைசிறந்தவர். 'கல்வியில் பெரியவன் கம்பன்' என்று சிறப்புப் பெற்றவர். 'கம்பன் வீட்டுக் கட்டுத் தறியும் கவி பாடும்' என்றால் வேறு கூறுவானேன்? இவர், இராமாயணமே யல்லாமல் கலைமகள் மீது 'சரசுவதி அந்தாதி' என்னும் தோத்திர நூலையும் பாடியவர். நம்மாழ்வார் மீதும் ஓர் அந்தாதி நூலைப் பாடியவர். அது 'சடகோபர் அந்தாதி' என்று கூறப்படும். இவைகளே யல்லாமல் மற்றும் பல நூல்களைச் செய்ததாகவும் கூறுவர். இத்தகைய புலவருடைய கல்வி அறிவையும் ஆழ்ந்த அனுபவத்தையும் சொல்லவும் வேண்டுமா?

கம்பர், ஒரு நாள் மாலை சிறிது காற்ருேட்டமாக வயல் பக்கம் உலாவி விட்டு வரச் சென்ருர். சென்றவர் ஏற்றத் தினின்று நீர் இறைப்பவரைப் பார்த்துக் கொண்டு அங்கேயே நின்றுவிட்டார். அப்படி அவர் நின்றமைக்குக் காரணம், அவ்வேற்றம் இறைப்பவர் தம் களைப்புத் தெரியாமல் இருக்கப் பாடிக்கொண்டிருந்த பாட்டில் ஈடு பட்டதேயாகும். ஏற்றக்காரர் பாட்டு இசை யுடன் காதுக்கு இன்பம் தருவதோடு இல்லா மல், சிறந்த கருத்துக்கள் நிறைந்து அவர் மனதைக் கவர்ந்ததேயாகும்.

ஏற்றப்பாட்டு ஒருவரால் பாடப்படாமல் மாறி மாறி இருவரால் பாடப்படுவது. நீரை நீர்ச்சாலில் முகந்து எடுப்பவர் ஓர் அடி பாடி ஞல், அதைத் தொடர்ந்து ஏற்றக்கோலை மேலே இருந்து மிதிப்பவர் பாடி முடிப்பர். இந்த முறையில் ஏற்றப்பாட்டுப் பாடப் படும். இப்படிப் பாடிக்கொண்டே வரு கையில் ஒருவர், "மூங்கில் இலை மேலே" என்று பாடினுர். ஆஞல் அதைத் தொடர்ந்து அடுத்த அடியினை மற்ருெருவர் பாடவில்லை.

அதற்குள் பொழுது சாய்ந்து விட்டமையால், "அடுத்த நாள் காலையில் நீர் இறைப்போம்," என்று நீர் இறைப்பதை நிறுத்திவிட்டனர்.

கம்பர் ஏற்றப்பாட்டைக் கேட்டார்; பாட்டின் பொருளைத் தொடர்ந்து கவனித்துக் கொண்டு வந்தார்; ஆனால், 'மூங்கில் இலை மேலே' என்று கூறி அத்துடன் நிறுத்தப் படவே, அதனை எப்படிப் பொருள் முட்டுப் படாது முடிப்பது என்பதை அறியாமல் இடர் பட்டார். "மூங்கில் இலைமேல் என்ன இருக்க முடியும்? ஒன்றும் இருக்க முடியாதே. அப் படியிருக்க, இவ்வேற்றக்காரர் இப்படிக் கொண்டுவந்து பாட்டை நிறுத்திவிட்டனரே? நாம் இவ்வளவு படித்திருந்தும் இதனை முடிக்க இயலவில்லையே," என்று சிந்தித்துத் தம் இருப்பிடம் சேர்ந்தார். "முடியிட்டவன்தான் அம்முடியினை அவிழ்க்க வேண்டும் என் பது போல், அவ்வேற்றக்காரர்தாம் இதன் பொருள் முடிவைக் காட்டவேண்டும்!" என்று எண்ணியவராய், "எப்பொழுது பொழுது விடியப் போகிறது, எப்பொழுது வயல் ஓரம் போகப் போகிறோம்," என்று

இரவெல்லாம் சரியாக உறங்காமல் விடியற் காலம் நான்கு மணிக்கெல்லாம் புறப்பட்டு ஏற்றக்காரர் வருவதற்குமுன் அவ்வயல் வரப்பில் நின்றுகொண்டிருந்தார். ஏற்றக்காரர் வந்தனர். ஏற்றக்கோலைப் பற்றினர். தம் வழக்கப்படிப் பாடத்தொடங்கினர். அவர்கள் நல்ல ஒழுங்குமுறை அறிந்தவர்கள். புதிய ஏற்றப் பாட்டைத் தொடங்கிலர். நேற்றுமாலை விட்ட அடியாகிய 'மூங்கில் இலைமேலே' என்ற அடியினையே ஒருவர் சொல்ல மற்றொருவர் சிறிதும் தயங்காமல், தட்டுத் தடையில்லாமல் 'தூங்கும் பனிநீரே' என்று பாடினர்.

கம்பர் அவ்வடியினைக் கேட்டார். அப்படியே தம்பித்துப் போனார். "ஆ! எவ்வளவு பொருத்தம்! எவ்வளவு பொருத்தம்!" என்று வியந்தார். இந்தப் பொருத்தம் நமக்குப் புலனாகவில்லையே. ஆகவே, "நாம் கற்றறிந்திருந்தால் மட்டும் போதாது. கூடவே கேள்வி ஞானமும் பெற்றிருக்கவேண்டும். அதோடு எவர் எதைச் சொன்னாலும், அதனை அசட்டை செய்யாமல் அதன் உண்மைப் பொருளை உணர்தல் வேண்டும்," என்று உணர்ந்து

சிறிது நேரம் வயல் பக்கமாக உலாவிவிட்டுக் காலைக்கடன்களை முடித்துவிட்டுத் தம் இல்லம் சேர்ந்தார். ஆகவே, நாம் படிப்பதோடு நில்லாமல் கேள்வி ஞானத்தையும் பெற்றுப் பிறர் கூறும் மொழிகளின் உண்மைப் பொருளை உணர்தல் வேண்டும்.

### பயிற்சி வினாக்கள்

1. எது மெய்யறிவாகும் ?
2. கம்பர் யார் ? அவர் எழுதிய நூல்கள் எவை ?
3. கம்பரைப்பற்றி வழங்கும் பழமொழிகள் யாவை ?
4. ஏற்றப்பாட்டு இன்னது என்பதைக் கூறு.
5. கம்பர் ஏற்றப்பாட்டின் பொருளை உணர்ந்ததும் என்னென்ன எண்ணினார் ?
6. இப்பாடத்தின் மூலம் நாம் அறியவேண்டிய சிறந்த கருத்து யாது ?

### கட்டுரைப் பயிற்சி

"எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும்" என்னும் குறட்பாவின் கருத்தினை கம்பர் உணரக் காரணமாக இருந்த நிகழ்ச்சியினை வரைக.

# 7. உலகுக்கு முதல்வர் கடவுள்




அகரம் முதல எழுத்துஎல்லாம்; ஆதி
பகவன் முதற்றே உலகு.

கடவுள் எங்கும் நிறைந்தவர். அவர் இல்லாத இடமே இல்லை. இதனையேதான் வள்ளுவர் தம் அருமைத் திருக்குறள் நூலின் முதல் பாவிலேயே, எழுத்துக்கெல்லாம் எப்படி 'அ' என்னும் எழுத்து முதலாக இருக்கின்றதோ, அதுபோல, உலகத்திற்கு முதல்வராய்க் கடவுள் இருக்கிறார் என்று

அழகான உதாரணத்தின் மூலம் எடுத்துக் காட்டியுள்ளார் அன்றோ? இனி உலகுக்குக் கடவுள் முதல்வராய் உள்ளார் என்பதைக் காண்போமாக.

பஞ்சபாண்டவர்களைப் பற்றி நீங்கள் யாவரும் நன்கு அறிந்திருக்கின்றீர்கள் அல்லவா! அப் பஞ்சபாண்டவர்களுள் அருச்சுனன் ஒருவன் என்பதும் உங்களுக்குத் தெரியும். பஞ்சபாண்டவர்கள் காட்டில் வாழ்ந்திருந்தபோது வேதவியாசர் என்னும் முனிவர் அவர்களைக் காண வந்தார். வந்தவர் முனிவராதலின், அவரைத் தருமரும், மற்றும் உள்ள தம்பிமார்களும் நல்வரவு கூறி வரவேற்று, இருக்கையில் அமர்த்தி வணங்கி நின்றனர். வேதவியாசரும் பாண்டவர்களை ஆசீர்வதித்து, தருமரைப் பார்த்து, "தருமா! உனக்கும் உன் தம்பிமார்களுக்கும் ஏற்பட்டுள்ள இன்னல்களைக் குறித்து நான் வருத்தப்படுகின்றேன். என் செய்வது? என்றாலும் நான் ஒன்று கூறுகின்றேன். அதனைக் கேள். நீ உன் பகைவனை வெல்லவேண்டுமானால், சிவபெருமானிடமிருந்து 'பாசுபதம்' என்னும்

கணையைப் பெறவேண்டும். அதனைத் தவம் செய்து பெற்றால் அன்றிப் பெற முடியாது. அத்தவத்தை மேற்கொள்ளக்கூடியவன் அருச்சுனனே ஆவான். ஆகவே சிவபெருமானை நோக்கித் தவம் செய்யுமாறு அவனை அனுப்பி அவ்வுயர்ந்த கணையைப் பெற வழி காண்க," என்று கட்டளையிட்டுச் சென்றார்.

தருமர் தம் தம்பிமார்களுடன் ஆலோசித்து, சிவபெருமானிடமிருந்து அக்கணையைத் தவம் புரிந்து பெற்றுவருமாறு அருச்சுனனுக்குக் கட்டளையிட்டனர். அருச்சுனனும் தன் மூத்தோன் மொழிக்குச் செவிமடுத்து அவ்வாறே தவம் செய்து பாசுபதக் கணையைப் பெறப் புறப்பட்டுவிட்டனன்.

அருச்சுனன் தவம் மேற்கொள்ளத் தன் உடல் முழுமையும் திருநீற்றைப் பூசிக்கொண்டனன்; சடையை முடித்துக் கட்டினன். நான்கு திசைகளிலும் தீயை மூட்டி இடையில் தான் நின்று, ஒரு காலைப் பூமியில் பதித்து, மற்றொரு காலைத் தொடையில் ஊன்றி, இரு கரங்களையும் தலைக்குமேல் குவித்துக் கண் மூடித் தவம் செய்யலானான்.

பார்த்தன் என்று பெயர் பெற்ற அருச்சுனன், இவ்வாறு சிவபெருமானை நோக்கித் தவம் செய்கின்றான் என்பதை அறிந்தான் துரியோதனன். அருச்சுனன் தவம்புரிந்து சிவபெருமானிடமிருந்து ‘பாசுபதம்’ பெற்றால், தன்னையும் தன் சுற்றத்தாரையும் வென்று விடுவான் என்பதையும் அறிந்தான். வெற்றி பாண்டவர்களுக்கும் தோல்வி கௌரவர்களுக்கும்தான் கிட்டும் என்பதையும் உணர்ந்தான். ஆகவே, அருச்சுனன் கொண்ட தவத்தைக் கலைக்கத் திட்டமிட்டான். மூகாசுரன் என்பவனை அழைத்தான். அவனிடம் எவ்வாறேனும் அருச்சுனனுடைய தவத்தைக் கலைக்கக் கட்டளையிட்டான். மூகாசுரனும் அவ்வாறே செய்வதாக வாக்குறுதி தந்து தான் ஒரு காட்டுப்பன்றி வடிவுடன் அருச்சுனன் தவத்தைக் கலைக்க அவன் தவம் செய்யுமிடத்தை நாடிவந்தான்.

இந்த நிலைமையினை எங்கும் காது உள்ளவராய், எங்கும் கண்ணுள்ளவராய், எங்கும் நிறைந்து உள்ளவராய் இருக்கும் சிவபெருமான் அறிந்து, தன்னை நோக்கிக் கடுந்தவம்

புரியும் அருச்சுனனுக்குக் காட்டுப் பன்றியால் கெடுதி ஏற்படாதிருக்கவும், அருச்சுன னுடைய தவத்துக்கு இரங்கி அவனுக்குப் 'பாசுபதம்' கொடுத்து அருள்புரியவும் தான் ஒரு வேட வடிவில் வில்லும் அம்புமாகப் புறப்பட்டனர். மூகாசுரனாகிய பன்றி அருச் சுனன் தவத்தைக் கலைக்க முயன்றது. அருச்சுனன் தன் தவநிலையைச் சிறிது விடுத்து அப்பன்றியோடு போர் தொடுக்க முனைந்தான். சிவபெருமானும் பன்றியைக் கொல்ல, வில்லை வளைத்து அம்பைத்தொடுத் துப் பன்றியின்மீது ஏவினர். இருவருக்கும் இடையே ஏனம் அகப்பட்டுக்கொண்டது. ஒரே சமயத்தில் அருச்சுனன் விட்ட அம்பும் சிவபெருமானாகிய வேடன் எய்த அம்பும் ஏனத்தின் உடலில் தைத்தன. ஓர் அம்பு பட்டாலே உயிர் விடக்கூடிய பன்றி ஈரம்பு பட்டபின்பும் உயிரை விடாது இருக்குமோ? பன்றி இறந்தது. ஆனால் சிவபெருமானாகிய வேடனுக்கும், தவக்கோலத்தில் இருந்த அருச்சுனனுக்கும் தருக்கம் நடக்கத் தொடங் கிற்று.

சிவபெருமான் அருச்சுனனைப் பார்த்து, "நீ பசுத்தோல் போர்த்த புலி. உனக்கு என்ன தான் ஆபத்து வந்தாலும் நீ கொண்ட தவத்தை விட்டு வரலாமா? எனவே உன் உயிர்மேல் உனக்கு அவ்வளவு பற்று இருக்கிறது. மேலும், நான் கொன்ற பன்றியை நீ அம்புபோட்டுக் கொல்லலாமா? இது வீரனுக்கு அழகா?" என்றெல்லாம் கேட்டனர். அருச்சுனனுக்குக் கோபம் வந்தது. அவனுக்கு வேடனுகத் தன் முன் நிற்பவர் சிவபெருமான் என்பது தெரியாது. ஆகவே, "அடே, வேடா! அதிகமாகப் பேசாதே. உனக்கு வேண்டியது பன்றி. ஆகவே, அதனை எடுத்துச் செல். இல்லையேல் என் அம்பால் உன்னைக் கொல்வேன்," என்றனன். "என்னையா நீ கொல்லக்கூடும்? அம்பு எய்து கொல்வது ஒருபுறம் இருக்கட்டும். என்னோடு மற்போர் செய்து முதலில் வெல் பார்க்கலாம்," என்று சிவபெருமான் கூறினர். அருச்சுனன் அதற்குச் சம்மதித்தனன். இருவருக்கும் மற்போர் நடந்தது. வலியரில் வலியரான சிவபெருமானிடம் வில்விசயன் வன்மை

என் செய்ய இயலும்! சிவபெருமானாகிய வேடன் அருச்சுனனைப் பந்துபோல் தூக்கித் தூக்கி எறிந்தனர். அருச்சுனனுக்குப் பெருங் கோபம் வந்தது. "கேவலம் ஒரு வேடன் நம்மை இப்படி அலக்கழிக்கின்றானே," என்று எண்ணினான். தன் கோபம் அடங்கப் பெறாத வனாய்த் தன் கையிலிருந்த வில்லால் ஓங்கி வேடனுடைய தலையில் அடித்தனன். அவ் வளவுதான்! அந்த அடி அந்த வேடன் தலை யில் மட்டுமா பட்டது? அருச்சுனன் தலையி லும் பட்டது. தேவர், மக்கள், விலங்கு, பறவை, ஊர்வன, நீர்வாழ்வன, தாவரம் ஆகிய எல்லாப் பொருள்களின்மீதும் பட்டது. தாய்மார் கருவில் இருந்த சிசுக்கள் மீதும் பட்டது; மழை, நீர், நெருப்பு, காற்று, ஆகாயம், சந்திர சூரியர்கள் மீதும் பட்டது. உயர்திணைப் பொருள்கள் மீதும் அஃறிணைப் பொருள்கள் மீதும் பட்டது; இந்த அடி அயர்ந்து இருந்தவர்களும், "இஃது என்ன! இஃது என்ன!" என்று வியக்கும்படி, அவர்கள் மீதும் பட்டது. அவரவர் ஒருவரை யொருவர் சந்தித்தபோது, "உமக்குத் தலையில்

ஏதேனும் திடுமென ஓர் அடி விழுந்ததோ,' என்று கேட்டுக்கொள்ளவும் தொடங்கினர்.

இதன்பின் சிவபெருமாளுக வந்த வேடர் இனியும் அருச்சுனனுக்குக் கோபம் வரச் செய்தல் கூடாது என்று திருவுளம் கொண்டு, அவனுக்கு அருள் செய்ய ஆகாயத்தில் இடபத்தின்மீது தன் தேவியுடன் காட்சி அளித்தார். அருச்சுனன் கண்ணீரும் கம்பலையுமாக இருந்து அவரை வணங்கிப் போற்றினுன்; அறியாமல் அடித்ததற்கும், அவதூறுகப் பேசியதற்கும் மன்னிப்பு அருளுமாறு வேண்டினுன். சிவபெருமான் அன்பர்க்கு எளியன் ஆதலின், அருச்சுனனை மன்னித்து, அவன் வேண்டியபடி 'பாசுபதம்' என்ற உயர்ந்த கணையைத் தந்து மறைந்தருளினர்.

இறைவன் மீது பட்ட அடி எல்லாப் பொருள்களின் மீதும் பட்டதனுல் உலகுக்கு ஆதிகாரணன் கடவுள் என்பது விளங்குகிறதல்லவா !

பயிற்சி வினுக்கள்

1. 'அகரம்முதல' என்னும் குறட்பாவை நன்கு விளக்குக.

TB
031,317
N66

2. அருச்சுனன் ஏன் தவம் செய்யச் சென்ருன் ?

3. அருச்சுனன் மேற்கொண்ட தவநிலையை விளக்குக.

4. சிவபெருமான் ஏன் வேடனுகப் புறப்பட்டனர் ?

5. சிவபெருமானுக்கும் அருச்சுனனுக்கும் நடந்த தருக்கம் யாது ?

## கட்டுரைப் பயிற்சி

அருச்சுனன் சிவபெருமானிடமிருந்து பாசுபதக் கணையைப் பெற்ற வரலாற்றை உன் சொந்த நடையில் எழுதுக.

# 8. இல்லை என்னாது ஈக



'இலன்,' என்னும் எவ்வம் உரையாமை ஈதல்
குலன்உடையான் கண்ணே உள.

உலகில் மக்கள் செல்வத்தைப் பெற்றுப் பயன் இல்லை. அச்செல்வத்தினால் பெறக் கூடிய பயனை அறிந்து அதனைப் பயன்படுத்தி னால்தான் செல்வத்தைப் பெற்றதனால் ஏற் படக்கூடிய பயனைப் பெறுவர். செல்வத்தினால் பெறக்கூடிய பயன்கள் பலவானாலும் சிறப்

பாக, செல்வத்தினுல் புண்ணியத்தைப் பெறு தலே சாலவும் பெருமை தருவதாகும். புண்ணியம் எப்போது கிடைக்கும்? வறுமையுற்றவர் தமக்கு இல்லாத காரணத்தால் வந்து கேட்கும் போது இல்லை என்னுமல் கொடுத்து வந்தால் புண்ணியம் கிடைக்கும். இன்னும் மேலாகச் சொல்லப்போனுல், ஈவதைக் கடமையாகக் கொள்ளவேண்டுமே யன்றிப் புண்ணியம் கருதி ஈகின்ருேம் என்ற எண்ணமும் இல்லாதிருத்தலும் சிறப்பினும் சிறப்பாகும். இந்தப் பண்பு உடையவரே நற்குலத்தவர் என்பது வள்ளுவர் கருத்து. இவ்வாறே இல்லை என்று கூருது ஈயும் பண்பு நற்குலத்தவர்பால்தான் உண்டு என்றும் அவர் கூறுகிருர். இதனுல் நற்குலத்தவராக அமைய விரும்பினுல் இல்லை என்னுது ஈயவேண்டும் என்பது பெறப்படுகிறதல்லவா? இதனை ஓர் உதாரணத்தால் பார்ப்போமாக.

சென்னைக்கு அருகில் திருநின்றவூர் என்ற ஓர் ஊர் உள்ளது. இவ்வூர் குடிவளத்திற்குக் குறைவற்றது. இங்குப் பூசலார் நாயனுர் என்னும் ஓர் அந்தணப் பெரியார் அமைத்த

ஆலயமும் உண்டு. அது இருதயாலயம் என்று கூறப்படுவது. ஆழ்வார்களின் பாடல் பெற்ற வைணவத் தலம் ஒன்றும் ஈண்டு உண்டு. இதனால் இத்தலத்தில் சைவ வைணவர்கள் கலந்து கடவுளடி பணிந்து வாழ்ந்து வந்தனர் என்பது பெறப்படுகிறதல்லவா!

இத்தகைய பெருமைக்கு உறைவிடமான திருநின்றவூரில் காளத்தியப்ப முதலியார் என்பவர் ஒருவர் பெருமையோடு வாழ்ந்து வந்தார். இவருக்கு நிலபுலன்கள் நிரம்ப இருந்தன. செல்வத்தில் இவர் சிறந்து விளங்கிய காரணத்தால் இவரைக் குபேரர் என்றும் அங்குள்ளார் கூறிவந்தனர். வறுமையால் வாட்டமுற்றுத் தம்மை அண்டினவர்கட்கு இவர் குறைவற ஈந்து வந்தனர். இந்தக் காரணத்தால் இவரைக் கன்னன் என்றும் கழறி வந்தனர். ஈபவர் கிடைத்தால் எவர் தாம் இவரை நாடாதிருப்பர்? மரம் பழுத்தால் வெளவாலை வா என்று இரந்து அழைக்க வேண்டியதில்லை அல்லவா! பல பக்கங்களிலுமிருந்து ஏழை எளியவர்கள் இவர்பால் வந்து பொருளைப் பெற்றுச் சென்றனர்.

இவ்வாறு சிறிதும் சளைக்காமல் ஈந்து வந்த காளத்தியப்ப முதலியாருக்கும் நாளுக்கு நாள் வறுமை ஏற்படலாயிற்று. செல்வம் தானே! அஃதாவது ஓரிடத்தில் நிலைத்து நிற்காமல் செல்வோம் என்று கூறிக் கொண்டு போவதுதானே! அந்த முறையில் வளப்பம் மிக்க செல்வம் மெல்ல மறைந்து விரைவில் வறுமைநிலை இவரை வந்தடைந்தது. தமக்கு இருந்த மாடு கன்றுகளை விற்று விட நேர்ந்தது; வீடு வாசல்களையும் விலைப் படுத்தும்நிலை ஏற்பட்டது. இவ்வாறான நல்குரவு ஏற்பட்ட காலத்திலும் தம் சீரிய செயலாகிய ஈயும் கடப்பாட்டில் ஒரு சிறிதும் குறைந்திலர். இப்படிக் கொடுத்துக் கொண்டு வந்தால் இன்னும் நமக்கு வறுமை வந்துறுமே என்று எண்ணவுமில்லை. ஈவது, ஈவதனால் இசையுடன் வாழ்வது இவற்றைத் தவிர்த்து மக்கட்குச் சிறந்த ஊதியம் வேறொன்றும் இல்லை என்பதே அவரது சீரிய கருத்து. ஆகவே, காளத்தியப்ப முதலியார், இந்த நிலையில் செல்வத்தில் சிறந்தும் பிறகு செல்வம் அற்ற நிலையிலும்

தம்மாலான உதவியினைச் செய்து வாழ்ந்துவர லாயினர்.

நாவின் கிழத்தியாம் கலைமகள் இருக்கும் இடத்தில் செல்வக்கிழத்தியாம் இலக்குமி நிலைத்திருப்பது நாட்டில் அரிது. இதனைப் புலவர்கள் வாழ்க்கையைக் கொண்டு விளக்க லாம்.

ஒரு புலவர், தம் கல்வியால் சிறப்புற்றி ருந்தும் வறுமையால் பெரிதும் வாட்டமுற் றிருந்தார். அவருடைய இல்லம் வறுமைக்கு உறைவிடமாக இருந்தது. எவ்வளவோ பொறுமையுடன் தம் வறுமையினை அண்டை அயலார்க்கும் வெளிப்படுத்தாத நிலையில் ஒரு நாள் உண்டும் பலநாள் உண்ணாதும் வாழ்ந்து வந்தார். என்றாலும் அவரை வறுமை சும்மாவிடவில்லை; அவரை ஏதேனும் எவரிடமேனும் சென்று பெற்றுவருமாறு தூண்டித் தொல்லை கொடுத்துக்கொண்டே இருந்தது. இந்தக் காரணத்தால் அப்புலவ ருக்கு, இல்லையென்னாது ஈயும் கடப்பாட்டை மேற்கொண்டு எவருக்கும் ஈந்து புகழை ஈட்

டும் திருநின்றவூர்க் காளத்தியப்பரது நினைவு வந்துற்றது. ஆகவே, ஒருநாள் புலவர் காளத்தியப்பரைக் காணப் புறப்பட்டார். புலவர் இருந்த ஊருக்கும் காளத்தியப்ப முதலி யார் வாழ்ந்த ஊருக்கும், இடையில் பல கல் தொலைவு இருந்தமையால் நடந்தும் வழி மாள வில்லை. மாலையும் வந்துற்றது. இருளும் சூழ்ந்தது. "இதற்குமேல் சென்று பயனில்லை. நாளைக் காலை அவரைக் காண்போம்," என்ற எண்ணத்தினராய் வழியில் இருந்த ஒரு சாவடியில் தங்கினர்.

திருநின்றவூர்க் காளத்தியப்ப முதலி யாரின் வறுமை அளவுக்கு மீறிவிட்டது. அவர் தமக்கு வறுமை மிஞ்சி நின்றது குறித்துக்கூட வருந்தவில்லை. தம்மை யாரேனும் அணுகி வந்துகேட்பின், இல்லை என்று சொல்ல வேண் டுமே என்ற வருத்தமே மேலிட்டது. அதை விட, "நாம் அவர்கள் கண்ணுக்கு அகப்படா மல் எங்கேனும் சென்றுவிடுவதே சாலப் பொருத்தமாகும்," என்று தீர்மானித்தவராய்த் தம் வீட்டைவிட்டு வெளிக் கிளம்பினர். நீள நடந்து வந்தவருக்குக் களைப்பும், இதற்கிடை

யில் இருளும் சூழ்ந்து கொண்டமையினுல், வறுமையுற்ற புலவர் எந்தச் சாவடியில் தங்கியிருந்தாரோ அந்தச் சாவடியிலேயே தாமும் வந்து தங்கலானுர்.

புலவரும் முதலியாரும் சாவடியின் திண்ணையில் படுத்துக்கொண்டிருந்தனர். புலவருக்குத் தம் பக்கலில் படுத்திருந்தவர் காளத்தியப்ப முதலியார் என்பது தெரியாது. முதலியாருக்கும் தம்மருங்கு படுத்து இருந்தவர் புலவர் என்பது தெரியாது. முதலியார் ஏதேதோ எண்ணமிட்டுக்கொண்டு உறங்காது கண்ணை மட்டும் மூடிக்கொண்டிருந்தனர். புலவரும் உறக்கம் கொள்ளாது பசி தம்மை வாட்ட வருந்திக்கொண்டு இருந்தார். பசிக் கொடுமை அவரைச் சும்மா இருக்கவிடவில்லை; வருத்தத் தொடங்கிற்று. அந்தோ, மிகவும் பாவம்! அவரால் அவ்வமயம் என்ன செய்ய முடியும்? அவர் புலவராதலின், அந்த இயல்பின்படி, தம்மை வருத்தும் வறுமையுடன் உரையாடுபவர்போல, ஒரு கவியினை அப்பொழுது பாடத் தொடங்கினுர். அக்கவியின் பொருளாவது: "ஏ வறுமையே! நிழல்போல என்னை விடாது

பற்றிக்கொண்டு வருகின்ருயே! உனக்கு என்ஃன விட்டு நீங்கும் காலம் அணுகிவிட் டது. நான் பொழுது விடிந்ததும் திருநின்ற ஹூர் வள்ளல் காளத்தியப்ப முதலியாரைப் பார்க்கப்போகிறேன். அவரைப் பார்க்கவேண் டியதுதான் தாமதம். அவர் எனக்கு என் வறுமை தீரப் பொருள் உதவி செய்வார். அதன் பின் நீ எங்கே? நான் எங்கே? இன் றைக்கு மட்டும் கொஞ்சம் பொறுத்துக் கொள்," என்பது. இதஃனக் கேட்டார் காளத்தியப்ப முதலியார். படுத்திருந்த முதலி யார் எழுந்து உட்கார்ந்தார்; புலவர் தோற் றத்தை உற்று நோக்கிஞர்; புலவர் உண்மை யில் வறுமைக்கு உறைவிடமாய் இருந்ததை யும் அறிந்தார். இவ்வளவு உறுதியுடன் என்ஃனக் காணச் செல்லும் புலவருக்கு நான் ஊரில் இல்ஃல என்பது தெரிந்ததும் எவ்வளவு வருத்தம் ஏற்படும். எதுவரினும் வருக. இனி நான் இங்கு இருத்தல் கூடாது. இவர் வருவதற்கு முன் நான் ஊருக்குச் சென்று இவரை வரவேற்க வேண்டும்," என்ற எண்ணத்தவராய் அப்பொழுதே

அவ்விருளில் புறப்பட்டுத் தம் இல்லத்தை யடைந்தார்.

விடியற்காலம் வந்துற்றது. புலவரும் புறப்பட்டார். திருநின்றவூரை அடைந்து காளத்தியப்பரைக் கண்டார். முதலியாரும் புலவரை இன்முகம் காட்டி வரவேற்றார்; உணவளித்து உபசரித்தார். இதற்குப்பின் பொருள் தந்து போகச் செய்யவேண்டுமே! அதற்கு காளத்தியப்பர் என்ன செய்வார்? தம் மிடம் பொருளோ இல்லை. இல்லை என்று சொல்லவும் இவருக்கு வாய் வராது. ஆகவே, இவ்வாறு இல்லை என்று சொல்வதைவிட உயிரை விடுவதே நல்லது என்று காளத்தியப்பர் தீர்மானித்தார். இல்லத்தின் பின்புற முள்ள தோட்டத்தில் பாம்புப்புற்று ஒன்று இருந்தது. "அதில் கையை விட்டேனும், அரவு தீண்டி இறப்போம்," என்று தன் கையை அப் புற்றில் விட்டார். தருமம் தலைகாக்கும் அல்லவா! அப்புற்றில் இருந்த பாம்பு அவரைத் தீண்டாமல் தன் நாகரத்தினத்தை அவர் கையில் இட்டது. முதலியாருக்கு ஆச்சரிய

மாகிவிட்டது. “இது இறைவன் திருவருள் போலும்!” என எண்ணினர். அதைச் செல்வர் ஒருவருக்கு விற்றுப் பெரும் பொருள் பெற்ருர். அந்தப் பொருளில் சிலவற்றைத் தம்மை நாடி வந்துற்ற புலவருக்கு ஈந்து போகவிட்டார். பார்த்தீர்களா, முதலியாரது வள்ளன்மையினை!

## பயிற்சி வினுக்கள்

1. நற்குலத்தவர் என்று யாரைச் சொல்லலாம்? ஏன்?
2. காளத்தியப்ப முதலியார் யார்? அவரைப் பற்றி நீ அறிந்தவை யாவை?
3. புலவர் ஏன் சாவடியை அடைந்தார்?
4. சாவடியில் இருந்த முதலியார் ஏன் உடனே புறப்பட்டுப் போய்விட்டார்?
5. முதலியார் எப்படித் தம் கொள்கையினைத் தடையின்றி நடத்தினர்?

## கட்டுரைப் பயிற்சி

திருநின்றவூர் காளத்தியப்ப முதலியார் இல்லை என்னுது ஈயும் கடப்பாட்டை உடையவர் என்பதை விளக்கி ஒரு கட்டுரை வரைக.

# 9. செய்ந்நன்றி மறவாமை



எந்நன்றி கொன்ருர்க்கும் உய்வுண்டாம் ; உய்வுஇல்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு.

மக்கள் மேற்கொண்டு ஒழுகவேண்டிய பண்புகள் பலவுண்டு என்பது நம் யாவருக்கும் தெரிந்ததேயாகும். அவற்றுள் கூடுமான வரையில் எல்லா நற்குணங்களையும் கொண்டு ஒழுகுதல் சாலச் சிறந்ததாகும். இவ்வாறு யாவரும் நற்பண்புகள் பலவும் பெற்று ஒழுக

வேண்டும் என்பதற்காகத்தான் உங்கட்கு இந்தச் சிறுநூல் மூலமாகக் கைக்கொள்ள வேண்டிய ஒழுக்கங்கள் பலவும் எடுத்து இயம்பப்பட்டு வருகின்றன. இந்தப் பகுதியில் செய்ந்நன்றி மறவாத நற்பண்பு பற்றிக் கூறப் படுகிறது. வள்ளுவர் ஒவ்வொரு கருத்தை யும் நன்கு வற்புறுத்திக் கூறவல்லவர் அல் லவா? அந்த முறையில் இங்குச் செய்ந்நன்றி மறவாமையைக் குறித்துச் செப்பும்போது, "எந்தவிதமான உதவிகளை மறந்தவர்கட்கும், அப்படி மறந்ததனுல் வரக்கூடிய பாவத்தி லிருந்து தப்பிப் பிழைக்க வழி ஏற்படும். ஆனுல், பிறர் செய்த நன்றியை மறந்தவர் அப் பாவத்திலிருந்து தப்பிப் பிழைப்பது அரிது," என்று கூறுகிருர். இதனுல் நன்றி மறப்பது நன்று அன்று என்பது பெறப்படுகிறது அல்லவா? இப் பண்பு அரக்கரிடத்திலும் அமைந்து கிடந்தது என்பதைக் கீழ்வரும் நிகழ்ச்சியினின்றும் அறிந்து கொள்ளலாம்.

கும்பகர்ணன் என்பவன் இலங்கை வேந் தனின் நேர் இளையவன். இராமாயணத்தில் ஏற்றம் பெறுவதற்கு உரியவன். பேருறக்

கத்திற்குப் பேர்போனவன். இக்காலத்திலும் எவனேனும் நீண்ட நேரம் உறங்குவானாயின் அவனைக் 'கும்பகர்ணன் போலத் தூங்குகிறான்' என்று கூறுவதைக் கேட்கலாம். ஆண்டாள் அம்மையாரும் தமது திருப்பாவை என்னும் நூலில், பள்ளிகொண்டு உறங்கும் ஒருத்தியைக் கண்டு, "தோழி! நீ இவ்வாறு உறங்குகின்றாயே! கும்பகர்ணன் தான் இறந்த போது, தன் இயல்பாகிய உறங்கும் தன்மையினை உனக்குக் கொடுத்துவிட்டுச் சென்றானோ?" என்று நகைச்சுவை ததும்ப நவின்று உள்ளார். கும்பகர்ணன் உறக்கம்தான் பெரிதும் உடையான் என்று கூறிவிடலாமா? அவன் சிறந்த உடல் வன்மையும், உளப் பண்பும் பெற்றவன். அரக்கர் கோனும் இராவணனுக்கு அமைச்சரவையில் தன் உள்ளக்கிடக்கை இன்னது என்பதை எடுத்து உரைக்குங்கால், "குற்றமற்ற பிறர்க்கு வாழ்க்கைப்பட்ட மங்கையினைச் சிறையில் அடைக்கின்றோம். நாம் தோள் வலி, மனவலி முதலானவற்றைப் பெற்றிருந்தும், மானிடர்களாகிய இராம இலக்கு

வருக்கு அஞ்சுகின்ருேம். மிக நன்ருக இருக்கிறது நமது வீரம்! நம் குலத்துக்குச் சிறுமையை அன்ருே தேடிக்கொண்டோம்? ஆகவே, சீதையை இனியாகிலும் விடுதலே செய்வோம்," என்று கூறியுள்ளான். இவ்வாறு இயம்பியவன் பிறகு போர்க்களம் போகாது பின்னிட்டாஞ? அதுதான் இல்லே. தன் கருத்தைக் கூறினுன். அதன்பின் இராம இலக்குவருடன் பொருது மடியவே உறுதி கொண்டான். போரும் மூண்டது. போர் நடந்த போது கும்பகர்ணனது வீரச் செயல்களேக் கண்ட இராமன் அவனேயும் தன்பால் எவ்வாறேனும் இணேத்துக் கொள்ள எண்ணம் கொண்டான். இவ்வெண்ணம் தவருன எண்ணம் அன்று. மன்னர்களாய் இருப்பவர் தாம் வெற்றி காண்பதற்குக் கையாளும் முறைகளுள் இதுவும் ஒன்று.

ஆகவே, கும்பகர்ணனேயும் தன்னிடம் சேர்த்துக்கொள்ளத் தன்னேச் சூழ இருந்தார் ஒப்புதலேப் பெற்றுக் கும்பகர்ணனுக்குக் கூறுவன கூறி அழைத்து வருமாறு தூதுவரை அனுப்ப உளங்கொண்டான். இராமன் அவ்

வமயம் யாரைத் தூதுபோக்கினுல் துயரம் இன்றி இவ்வெண்ணம் இனிதின் நிறை வேறும் என்று ஆலோசித்தான். இறுதியில் விபீடணன் தானே கும்பகர்ணன்பால் தூது போவதாகக் கூற அதனை அனைவரும் ஒப்பினர்.

விபீடணன் இராமனிடம் விடைபெற்றுக் கும்பகர்ணன் தங்கி இருந்த பாசறையினை அணுகினுன். இவனது வருகையினைக் காவல் காப்போர் கும்பகர்ணனிடம் கூறினர். இளவல் வருகை கேட்ட இளஞ்சிங்கமாம் கும்ப கர்ணன் பெருமகிழ்வு கொண்டு உள்ளே வரு மாறு பணிக்க, விபீடணன் உட்சென்று தன் முன்னேன் தளிர் அடிகளில் வீழ்ந்து பணிந் தான். கும்பகர்ணனும் விபீடணனைத் தன் கைகளால் வாரி எடுத்துத் தன் முன்னமர்த்தி, "தம்பி, நீ ஏன் இங்கு வந்தனை? நம் குலத் தில் ஒருவனுகிலும் உயிர் இழக்காது தப்பி னுன் என்று உளம் உவந்து இருந்தேன்; அவ்வுவகை ஒழிய நீ ஏன் மீண்டும் எம்பால் வந்து சேர்ந்தனை?" என்று கண்ணீரும் கம்பலையுமாக வினவினுன்.

இவ்வாறு தன் மூத்தோனுன கும்ப கர்ணன் கூறிய மொழிகளைக் கேட்ட விபீடணன், "அண்ணலே! யான் என் மனதில் தோன்றியதை உன்பால் கூற இங்கு வந்துள்ளேன். எனக்கு இராமன் பின்னுல் தருவதாகக் கூறிய இலங்கை யரசை உனக்கு யான் அளித்து, உன் அடிதொழுது உன் ஏவல் பூண்டு வாழ்வேன். நம் உற்ருர், உறவினர், அன்றித் தாய் தந்தையராஞலும், தீயவை செய்வாராகில் அவர்களுக்கு நாம் உடந்தையாக இருக்கலாமா? ஒருவன் தீங்கு செய்தால், அவனேடு தீங்கு செய்யாதவர்களும் கெட்டொழிதல் முறையாகுமா? நீயும் இராமனைச் சரண்புக்கால், மூவுலகிலும் உனக்குப் பகை வராது; தேவர்கள் நண்பர் ஆவர். இராமனே உன்மாட்டுக் கருணை வைத்து உன்னை அழைத்து வருமாறு எண்ணைப் பணித்தான். ஆகவே புறப்படுக," என்று கூறினன். உடனே கும்பகர்ணன், "விபீடணு! நீ கூறுவன அனைத்தும் உண்மையே. ஆனுல், உன் வார்த்தைகளுக்கு இணங்க என் மனம் இடம் கொடுக்கவில்லை. அவ்வாறு செய்வேனுகில்

யான் செய்ந்நன்றி கொன்ற பாவத்திற்கு ஆளாவேன். செஞ்சோற்றுக்கடன் கழிப்பது தான் எனக்கு ஆண்மையும் புகழும் ஆகும்," என்றனன்.

இவ்வாறு கும்பகர்ணன் கூறியது ஏன்? அவன் செய்ந்நன்றியை மறத்தல் கூடாது என்பதற்கன்றோ! ஆகவே நாமும் செய்ந் நன்றி மறவாது இருத்தல் வேண்டும்.

### பயிற்சி வினாக்கள்

1. 'எந்நன்றி கொன்றார்க்கும்' என்னும் குறளை நன்கு விளக்குக.
2. மக்கள் எப்படி வாழ எண்ணவேண்டும்?
3. நன்றியை ஏன் மறக்கக்கூடாது?
4. கும்பகர்ணனைப் பற்றிச் சிறுகுறிப்பு எழுதுக.
5. ஏன் விபீடணன் கும்பகர்ணனிடம் சென்றான்?
6. விபீடணனைக் கண்டதும் கும்பகர்ணன் என்ன கூறினான்?
7. கும்பகர்ணன் தன் கடமை உணர்ச்சியை எப்படிக் காட்டினான்?

### கட்டுரைப் பயிற்சி

விபீடணனுக்கும், கும்பகர்ணனுக்கும் நடந்த உரையாடலைச் சுருக்கி வரைக.

# 10. தோன்றின் புகழொடு தோன்றுக



தோன்றின் புகழொடு தோன்றுக ; அஃதுஇலார்
தோன்றலின் தோன்றாமை நன்று.

உலகில் உள்ள பொருள்கள் எவையும் நிலைபேறுடையவை அல்ல. அவை யாவும் அழிந்து ஒழிந்து போகக்கூடியவை. 'தோன்றின மறையும்' என்பது நம் முன்னோர் வாக்கு. "இப்படி அழிந்து ஒழிந்தால் நிலைபேறுடைய பொருளே இல்லையோ இவ்வுலகத்தில் ?"

என்று வினவலாம். அவ்வாறு நிலைபேறு உடைய பொருளே இல்லை என்று கூறி விடவும் முடியாது. அந்த நிலைபேறுடைய பொருள் எது என்று அறிய உமக்கு அவா எழுகின்றதன்றோ! நிலைபேறுடைய பொருள் புகழ் ஒன்றுதான். பூதவுடலாகிய நம் உடம்பு அழியினும் நுண் உடம்பாகிய புகழுடம்பு அழியாது. அத்தகைய அழியாத புகழை நாம் அடைய எவ்வாறேனும் பாடு படவேண்டும். அவ்வாறு நாம் புகழைத் தேடாது வெறும் மக்கட் பிறப்பு மட்டும் பெற்றிருந்தால் பயனில்லை. அதைவிடப் பிறவாமல் இருத்தலே நல்லது. இதுதான் வள்ளுவர் கூறும் கருத்துமாகும். இங்ஙனம் புகழை நிலை நிறுத்திய பெரியவர்கள் பலருள் ஒருவரைப் பற்றிக் கூறின் அக்கருத்தின் உண்மை புலனாகும் அல்லவா!

பாண்டியநாடு மிகப் பழமையான நாடு. அந்நாட்டின் துறைமுகங்களில் ஒன்று கீழ்க் கரை என்பது. இதனைக் கீழைக்கரை என் றும் கூறுவர். இந்தக் கீழ்க்கரைப் பட்டினத்

தில் இற்றைக்குச் சற்றேறக்குறைய முந்நூறு ஆண்டுகளுக்கு முன்பு சீதக்காதி என்னும் பெயருடைய முகம்மதிய அன்பர் ஒருவர் தோன்றினர். இவரது பெற்ருேர் அவருக்கு இட்ட பிள்ளைத் திருப்பெயர் செய்கு அப்துல் காதர் மரக்காயர் என்பது. இப்பெயர் நீள மாக இருக்கிறதல்லவா? மேலும் இவர் தமிழறிஞர்கள் பலராலும் பாடப்படும் பேறு பெற்றவர். அப்படிப் பாடிய தமிழ்ப் புலவர்கட்கு இவ்வாருன நீண்ட பெயரைத் தம் பாடலில் அமைப்பது சிறிது கடினமாக இருந்தமையால், செய்கு அப்துல் காதர் மரக் காயர் என்னும் பெயரின் மருவுமொழியாகச் 'சீதக்காதி' என்றே கொண்டு தம் தம் பாடலில் அமைத்துக்கொண்டனர். அப் பெயரே எல்லாரும் அறிந்துகொள்ளும் முறை யில் நம் நாட்டில் நிலேத்துவிட்டது.

பிறந்தது முதற்கொண்டே சீதக்காதி பேரும் புகழும் பெற்றுத் திகழக்கூடிய வர் என்பதை அறிவிக்கும் முறையில் வளர்ந்து வந்தார். விளையும் பயிர் முளை யிலேயே தெரியும் அல்லவா? சீதக்காதி

நன்கு கல்வி பயின்ருர். அடக்கம், ஒழுக்கம், அன்பு, ஈகை முதலிய பண்புகளுக்கு உறை விடமாகத் திகழ்ந்து வரலானுர். இந்தப் பண்புகள் இவர்பால் அமைந்திருந்தமை யால் இவரைப் பேரறிஞர்களும் விரும் பினர்.

இவ்வாறு விரும்பிய அறிஞர்களுள் செய்கு சதக்கத்துல்லா அவர்களும் ஒருவ ராவார். இப்பெரியார் உண்மைத் துறவி. அரபி மொழியினை ஐயம் திரிபற ஓதி உணர்ந்தவர். இத்தகைய அறிஞர் வாழ்ந்த காலத்தில் ஔரங்கசீப் என்பவர் நம் நாட்டை அரசு புரிந்து வந்தார். அம்மன்னர் தம் அரசை விளங்க வைக்கத் தக்க அரசப் பிரதிநிதி ஒருவர் வேண்டுமென்ற எண்ணத்திஞல் சதக்கத்துல்லாவுக்கு ஒரு கடிதம் போக்கித் தம் நாட்டு அரசப் பிரதிநிதி யாக இருக்குமாறு வேண்டினுர்.

சதக்கத்துல்லா ஒரு சிறந்த அறிஞர் என்று முன்னரே குறிப்பிட்டோம் அல்லவா? அவருக்கு அரசு பிடிக்குமா? அனைத்தும்

அழியக்கூடியவை என்று கருதும் அவருக்கு இப்பதவி எப்படிப் பிடிக்கும்? ஆகவே அப்பணியைத் தாம் ஏற்க மறுத்து அப்பதவியினை சீதக்காதிக்கு அளிக்குமாறு ஔரங்கசீப்புக்கு அறிவித்தனர். ஔரங்க சீப்பும் இதற்கு எந்தவிதமான தடையும் கூருது, சீதக்காதியை வங்காளத்தில் அரசப் பிரதிநிதியாக நியமித்தார். வினை வலி, தன்வலி, மாற்ருன்வலி, துணை வலி முதலியன அறிந்து அப்பதவியினை அழகுறச் சீதக்காதி அன்பர் ஏற்று நடத்தி வந்தார். ஆனல், இப்பதவியினை இவர் நீண்டநாள் ஏற்று இன்புற்றிலர். இவர் உடலுக்கு வங்கநாட்டின் தட்பவெட்ப நிலை ஊறு செய்வதாக இருந்தது. ஆகவே, அவர் அவ்வரசப் பிரதிநிதிப் பதவியினை விடுத்துத் தம் பிறப்பகமாகிய கீழ்க்கரைக்கே வந்து சேர்ந்தார்.

சீதக்காதி வங்காளத்தில் அரசப்பிரதி நிதிப் பதவி பூண்டு அரசு புரிந்ததைப் பற்றி இராமநாதபுர விசயரகுநாத சேதுபதி அவர்கள் கேள்வியுற்ருர். உடனே, சீதக்

காதியை அழைத்துவர ஆளைப் போக்கினர். சீதக்காதி இராமநாதபுரம் வந்துற்றதும், விசய ரகுநாத சேதுபதி மன்னர், அவரை அமைச்சராகவும், அன்பராகவும் அமர்த்திக் கொண்டார். இப்பதவியேற்ற சீதக்காதி அன்பர், இராமநாதபுரக் கோட்டையினை அழகுற அமைத்துக் கட்டினர். இதனைக் கண்டு வியந்த சேதுபதி மன்னர், அமைச்சராகவும் அன்பராகவும் கொண்ட சீதக்காதியைத் தம் தம்பியாகவும் கருதி 'விசயரகுநாதர்' என்னும் பட்டத்தையும் தந்து பாராட்டினர். இப்பட்டம் பெற்றபின் இவர் 'செய்கு அப்துல் காதர் விசயரகுநாதப் பெரிய தம்பி மரக்காயர்,' என்றும் அழைக்கப்பட்டார். இவ்வாறு அழைக்கப்பட்டது மக்களிடையேதான்; ஆனல் புலவர்கள் சீதக்காதி என்றே செப்பி வந்தனர். சீதக்காதி இவ்வாறு சீரும் சிறப்பும் பேரும் புகழும் பெற்று விளங்கினர். செல்வம் பெருவாரியாகக் குவிந்தது. இவ்வாறு குவிந்த செல்வத்தைத் தாமே துய்க்க வேண்டும் என்று எண்ணிலர். 'செல்வத்துப் பயனே ஈதல்' என்ற சீரிய

கொள்கையினராய், தம்மை அடைந்து கேட்ட வறியவர்கள், புலவர்கள் யாவருக்கும் இல்லை என்னுது ஈந்து வந்தார்.

இவர் வாழ்ந்த காலத்தில் பஞ்சம் ஒன்று தோன்றியது. இதனுல் மக்கள் பசியால் வாடினர். இவ்வாட்டம் கண்ட சீதக்காதி பல இடங்களில் அன்ன சத்திரம் கட்டி அன்ன தானம் செய்து வந்தார். இவ்வாறு இவர் அன்னதானம் செய்து புகழ்பெற்றனர் என்பதைச் சைவப் புலவராம் படிக்காசுத் தம்பிரான் அவர்கள், 'ஒரு தட்டிலே பொன் கொடுத்தால் அப்பொன் எடைக்கு நெல்லை விற்கும் பஞ்ச காலத்திலும் எவர் தடுத்தாலும் அத்தடைகளைப் பொருட்படுத்தாது அன்ன தானம் செய்த வள்ளல் சீதக்காதி,' என்று மனமாரப் புகழ்ந்து பாடியுள்ளார். இவ்வாறு இவ்வள்ளல் புகழ் பெற்றுத் தமிழ்மொழி தழைக்கப் புலவர்களையும் ஆதரித்தார்.

எவ்வளவு இருந்தும் என்ன? முடிசார்ந்த மன்னரும் மற்றும் உள்ளோறும் முடிவில் ஒரு பிடி சாம்பராகி மண்ணுவது உறுதிதானே?

அந்த முறையில் சிறக்க வாழ்ந்த சீதக்காதிக்கும் வாழ்நாள் உலர்ந்தது. அவர் பூத உடல் நீத்தார். அப்படி நீத்தற்கு முன் தம் உறவினர்களை நோக்கி, "சுற்றத்தவர்களே! நான் இறந்தால், கைவிரலில் உள்ள மோதிரத்தைக் கழற்ருமல் அப்படியே வைத்துச் சவப்பெட்டியில் அடக்கம் செய்துவிடுங்கள்," என்று கூறியிருந்தார். அதன்படியே உறவினர்கள் சவப்பெட்டியினை இடுக்காட்டில் கொண்டு சென்று புதைத்துவிட்டு வந்தனர்.

சீதக்காதி இறந்த செய்தி படிக்காசுப் புலவருக்குத் தெரிந்தது. துடிதுடித்தார் புலவர்; ஓடோடியும் இடுக்காட்டிற்கு வந்துசேர்ந்தார்; சீதக்காதியின் பருவுடல் புதைக்கப்பட்ட இடத்தின் எதிர் நின்று, "காயல்பட்டினத்தில் சீதக்காதி தன் புகழ்த்தம்பம் நாட்டி வாழ்ந்தான். இப்படி வாழ்ந்தவன் புலவர்களை ஓட்டாண்டியாக்கி, அவர்கள் வாயில் மண்ணைப் போட்டு இச்சமாதிக் குழியில் மறைந்துள்ளானே! இனி இலக்குமி இருந்து யாது பயன்? கலைமகளும் இருந்து பயன் என்ன? நாம்தான் இருந்து பயன் யாது? நாவலர் காவ

லனும் சீதக்காதி இறந்த பிறகு எம்போன்ற புலவர்களுடைய புலமையும் இறந்தது அல்லவா ?" என்ற கருத்துக்களை அமைத்துக் கல்லும் கரையும் முறையில் கவிகளைப் பாடினர்.

இந்தப் பாடல்கள் பாடப்பட்டு நிறுத்திய சிறிது நேரத்திற்கெல்லாம் சவக்குழி பிளந்து சவப்பெட்டியிலிருந்து மோதிரம் இட்ட கை வெளியில் தோன்றியது. இதன் குறிப்பு, "இந்த மோதிரத்தைப் பெற்றுக்கொள்," என்பதாகும். இதைக்கண்ட புலவருக்குப் பெருவியப்புத் தோன்றியது. புலவர் வெகுமதி பெற அங்கு வந்தாரில்லை. தம் வருத்தத்தைத் தெரிவிக்கவே அங்கு வந்தார். அப்படி வந்த அவருக்கு வெகுமதியும் கிடைத்தது. இந்தச் செய்தி ஊர் எங்கும் காட்டுத் தீப்போல் பரவிற்று. இதனைக் கேட்ட யாவரும், "செத்தும் கொடுத்தான் சீதக்காதி" என்று கூறத் தொடங்கினர். இவ்வாறு சொல்லத் தொடங்கிய தொடர், தொன்று தொட்ட பழமொழியாகவே நின்றுவிட்டது. இவ்வாறன்றோ புகழை நிலவுலகில் நிறுத்தவேண்டும்!

## பயிற்சி வினாக்கள்

1. 'தோன்றின் புகழொடு' என்று தொடங்கும் குறளை நன்கு விளக்குக.
2. பிறப்பதுண்டேல் எவ்வாறு பிறக்கவேண்டும்?
3. சீதக்காதி என்பவர் யார்?
4. இவருக்கு எப்படி அரசப் பிரதிநிதிப் பதவி கிட்டியது?
5. சீதக்காதி எவ்வாறு சேதுபதி மன்னரால் சிறப்பிக்கப்பட்டார்?
6. சீதக்காதி வள்ளன்மையுடையவர் என்பது எப்படித் தெரிகிறது?
7. 'செத்தும் கொடுத்தான் சீதக்காதி' என்னும் பழமொழி எங்ஙனம் உண்டாயிற்று?

## கட்டுரைப் பயிற்சி

சீதக்காதி இந்நிலவுலகில் புகழை நிலைநிறுத்திய வரலாற்றைச் சுருக்கி வரைக.

# 11. அரசன் கடமை



குடிதழீஇக் கோலோச்சும் மாநில மன்னன்
அடிதழீஇ நிற்கும் உலகு.

மன்னர்களாக இருந்தால் மகிழ்ச்சி மிக உண்டு என்று கூறிவிட முடியாது. மன்னர்களுக்கு இருக்கும் பொறுப்பு அதிகமாகும். மக்கள் வேண்டுமானல் கவலையற்று இருக்கலாம். மன்னன் அவ்வாறு கவலையற்று இருக்க முடியாது. மாநிலத்தைக் காக்கும் மன்னன்,

குடிகளுக்கு வரக்கூடிய ஐந்து வகையான அச்சங்களையும் போக்கி அரசு செய்யவேண்டும். அவையாவன : தன்னால் வரக்கூடியது, தன் பரிசனங்களால் வரக்கூடியது, பகைவர்களால் வரக்கூடியது, திருடர்களால் வரக்கூடியது, விலங்குகளால் வரக்கூடியது ஆகியவைகளாம். இந்த முறையில் அச்சங்களை நீக்கி அரசு செய்கின்ற மன்னர்களைக் குடிமக்கள் பெரிதும் போற்றுவர். அத்தகைய மன்னர்களைக் 'குடிதழுவிக் கோல் ஓச்சும் மன்னர்' என்று கூறுவர். இப்பண்புடைய மன்னரது அடிகளைக் குடிமக்களும் தழுவி நிற்பர். இவ்வாறு விளங்கிய மன்னர்கள் நம் நாட்டில் பலர் இருந்தனர். அவர்களுள் ஒருவன் பொற்கைப் பாண்டியன் என்பவன்.

பொற்கைப் பாண்டியன் பாண்டிய நாட்டில், மதுரை மாநகரில் செங்கோல் செலுத்தி வந்தான். அவனது ஆட்சியில் மேலே குறிப்பிட்ட ஐவகை அச்சங்களே கிடையா. அவன் பிறரைக்கொண்டு தன் நாட்டுக் குடிமக்கள் தன்னைப்பற்றி என்ன கூறுகிறார்கள் என்பதை அறிய எண்ண

மில்லாதவனுய்த் தானே அறிந்துகொள்ள வேண்டுமென்ற பேரவா உடையவனுய் இருந்தான். அவ்வாறு இருந்து யாது பயன்? அதனை நிறைவேற்றவும் வேண்டுமன்றோ? ஆகவே, பொற்கைப் பாண்டியன் தினமும் நள்ளிரவில் வேற்றுருவுடன் நகர் சோதனை செய்துவருவான். குடிமக்கள் தம் வீட்டில் என்ன கூறிக் கொள்கின்றனர் என்பதைக் கூர்ந்து கவனித்துக்கொண்டு வருவான். திருடர்கள் திருட வருகிறுர்களா என்பதைக் கவனிக்கவும் இவ்வாறு இரவில் நகர் சோதனை செய்து வந்தான். இது நாள்தோறும் நடந்து வந்தது.

மதுரையம்பதியில் ஓர் அந்தணர் வீதியிலே ஓரிரவு இருவர் உரையாடிக் கொண்டிருந்த அரவத்தை வழக்கப்படி நகர் சோதனைக்கு வந்த பொற்கைப் பாண்டியன் கவனிக்க நேர்ந்தது. அவ்விருவரும் என்ன பேசிக் கொள்கின்றனர் என்பதை அறிய அவாவுற்ற வனுய் மெல்ல அப்பேச்சு நடக்கும் வீட்டுத் திண்ணையில் உறங்குபவன் போலப் படுத்

திருந்து இருவரும் பேசிய பேச்சுக்களை உற்றுக் கேட்டுக்கொண்டிருந்தான்.

பேசியவர்கள் கணவன் மனைவியர் ஆவர். அவர்கள் அந்தண குலத்தினர். அந்தணர் தாம் காசிக்குச் சென்று கங்கையில் நீராடி விரைவில் திரும்புவதாகத் தம் மனையாளிடம் கூறினர். அம்மனையாள், தன் கணவனை நோக்கி, "அன்புடையீர்! காசி என்பது அண்மையில் உள்ள ஊர் அன்றே. அது நெடுந் தொலைவிலன்றோ உள்ளது? அங்குச் சென்று மீள்வதாயின் நீண்ட நாட்கள் பிடிக்குமே. நீங்கள் திரும்பி வருகிற வரையில் யான் எப்படித் தனித்து இருப்பேன்?" என்று கூறி அந்தணர் காசிக்குச் செல்வதைத் தடுத்துவிட எண்ணினள்.

ஆனல், அந்தணர் தாம் கொண்ட எண்ணத்தை மாற்றிக்கொள்ளவில்லை. எப்படியும் காசிக்குச் சென்று மீள்வது என்றே தீர்மானித்துவிட்டார். என்றாலும், தன் மனையாளைச் சமாதானப்படுத்திவிட்டன்றிப் போதல் கூடாது என்ற எண்ணத்தவராய்த் தம் மனை

யாளை நோக்கி, "அன்புடையாளே! நம் பாண்டிய மன்னனது அரசாட்சியில் குடி மக்களுக்கு அச்சம் என்பது ஒன்று ஏற்படுமா? அவன் குடிமக்களைக் கண்ணும் ஆவியும் போலல்லவா காத்துவருகின்றான். அப்படி இருக்க, நீ சிறிதும் கருதாது இப்படிக் கூறுகின்றனையே! நான் வரும்வரையும் இந்நாட்டு மன்னனது செங்கோல் உன்னைக் காத்து வரும். சிறிதும் அஞ்சற்க. யான் நாளைக் காலைப் புறப்பட்டுவிடுகின்றேன். உத்தரவு கொடு," என்று கூறினார். அந்தணரது மனையாள் அதற்கு மேல் ஒன்றும் தடைகூறவில்லை. தன் கணவர் காசிக்குச் சென்று வர இசைந்தாள். அந்தணரும் விடியற்காலை வடக்கு நோக்கிக் காசிக்குப் புறப்பட்டார்.

இவை அனைத்தையும் மன்னன் அவ்வந்தணர் வீட்டுத் திண்ணையில் இருந்து கேட்டு, அந்தணர் புறப்படுதற்குமுன் தன் அரண்மனை வந்து சேர்ந்தான்; அவ்வந்தணர் இல்லத்தைக் காவல் புரியும் பொருட்டு எந்தக் காவலாளியையும் அமைத்திலன். பொற்கைப் பாண்டியனே தினமும் இரவு பதினொரு

மணிக்கு நகர்ச் சோதனைக்குப் புறப்பட்டு, நகர்ச் சோதனை முடிந்ததும் அந்தணர் வீட்டுத் திண்ணையில் படுத்திருந்துவிட்டு, விடியற்காலையில் எவர் கண்ணுக்கும் தென் படாமல் தன் அரண்மனைக்கு வந்துகொண் டிருந்தான். இவ்வாறு பல நாட்கள் நடந்து வந்தது.

காசிக்குச் சென்ற அந்தணர், கங்கையில் நீராடிக் காசி விசுவநாதரையும் காசி விசா லாட்சி அம்மையாரையும் கண்டு வழிபட்டு மீண்டு தம் நாடாகிய பாண்டிய நாட்டில் மதுரையம்பதியை அடைந்தார். அன்று இரவு அந்தணர் தம் மனைவியுடன் நீண்ட நேரம் காசிக்குச் சென்ற தன் அனுபவங் களைக் குறித்துப் பேசிக்கொண்டிருந்தார்.

வழக்கப்படி நகர்ச் சோதனைக்கு வந்த மன் னன், அவ்வீட்டினுள்ளே இருவர் பேச்சுக் குரல் கேட்பதை உணர்ந்து அக்குரல் யாரு டைய குரலாக இருக்கலாம் என்பதைச் சிறி தும் கருதாது, தான் வருவதற்கு முன் எவரோ உட்புகுந்து அந்தணருடைய மனையாளோடு

பேசிக்கொண்டு இருப்பதாக எண்ணி, அவருடைய மனையின் கதவைத் தட்டினான். உடனே அந்தணர், "யார் கதவைத் தட்டுவது," என்றார். அரசன் திடுக்கிட்டுப் போனான். "அந்தோ! நான் அந்தணர் மனையாளுக்கு ஆபத்து வரக்கூடிய செயலைச் செய்து விட்டேனே! தினமும் நான் வந்து போவதாக அந்தணர் எண்ணிவிடுவாரே," என்று எண்ணி, திடீர் என்று ஒரு யோசனை தோன்ற, அந்தத் தெருவில் இருந்த எல்லா வீட்டுக் கதவுகளையும் தட்டிக் கொண்டே போய் இறுதியில் தன் அரண்மனையை அடைந்தனன்.

அந்தணர்கள் எல்லோரும் வெளியே வந்து, "யாரோ திருடன் நம் வீட்டிற்கு வந்தான்; நம் வீட்டுக் கதவுகளைத் தட்டிவிட்டுச் சென்றான். இது என்றும் இல்லாத நிகழ்ச்சியாக இருக்கிறது. அச்சமின்றி வாழ்ந்த இந்த நாட்டில் இப்போது, அச்சம் வந்து புகுந்து விட்டது. இதனை நம் நாட்டு மன்னனும் பாண்டியனுக்கு அறிவிக்கவேண்டும்," என்று தீர்மானித்து, எப்பொழுது பொழுது

விடியப்போகிறது என்பதை எதிர்நோக்கி இருந்தனர்.

பொழுது விடிந்ததும் அந்தணர்கள் ஒரே கூட்டமாகப் பாண்டியன் அரண்மனையை அடைந்தனர். எல்லோரும் மன்னன் கொலு வீற்றிருந்த இடத்தை நெருங்கினர்.

பாண்டிய மன்னனுக்கு அந்தணர்கள் வந்திருப்பதற்குக் காரணம் இன்னது என்பது தெரிந்தாலும், அதனை வெளிக்காட்டாது, "அந்தணர்களே! நீங்கள் ஒரே கூட்டமாக ஏன் இங்கு வந்துள்ளீர்கள்?" என்று கேட்டான். அந்தணர் குழுவில் இருந்த வயது முதிர்ந்த ஒருவர், "அரசே! நேற்று இரவு இதுவரையில் நிகழாதது ஒன்று நிகழ்ந்தது. அது, திருடன் ஒருவன் பொருளைத் திருடுவதற்காக வந்து எங்கள் வீட்டுக் கதவுகளைத் தட்டிச் சென்றதாகும். தங்களுடைய அரசாட்சியில் இப்படி இதுவரை நடந்ததில்லை. இதனை அறிவிக்கவே நாங்கள் இங்கு வந்தோம்," என்று கூறினர்.

அரசன், அந்தப் பெரியார் கூறிய அனைத்

தையும் பொறுமையுடன் கேட்டு, "அந்த ணர்களே! அந்தத் திருடனைக் கண்டு பிடித்தால் அவனை என்ன செய்யலாம்?" என்று கேட்டான். அதற்கு அந்தணர்கள், "அவ்வாறு எம் வீட்டுக் கதவுகளைத் தட்டிய அவனது கையை வெட்டி விட வேண்டும்," என்று கூறினர்.

இவ்வாறு அந்தணர்கள் அனைவரும் கூறக்கேட்ட அரசன், "அந்தணர்களே! அப்படித் தட்டிய கள்வன் நானேதான்," என்று கூறித் தன் உடைவாளைக் கொண்டு தன் கையை வெட்டிக்கொண்டான்.

பிறகு அந்தணர்கள் அரசன் வாயிலாக நடந்ததைக் கேட்டுப் பெரிதும் வருந்தினர். வருத்தப்பட்டு யாது பயன்? அரசனது கை வெட்டுண்டது, வெட்டுண்டதுதான்!

ஆனல், அந்தணர்கள் ஆலவாய்ப் பெருமானை நோக்கி வெட்டுண்ட கை பொற்கையாகுமாறு வேண்டினர். பெரியோர்களுடைய வேண்டுகோள் வீண்போகாது. ஆகையால், அவ்வாறே ஆலவாய்ப் பெருமானுர் அருள் காரணமாக, அரசனின் வெட்டுண்ட கை

பொற்கையாகத் திகழ்ந்தது. இக்காரணம் பற்றியே அப்பாண்டியன் பொற்கைப் பாண்டியனென அழைக்கப்பட்டான். குடிமக்களும் இத்தகைய மன்னனது அடிகளைத் தழுவி வாழ்வர் என்று கூறவும் வேண்டுமா!

## பயிற்சி வினாக்கள்

1. 'குடிதழீஇ' என்ற குறட்கு விளக்கம் தருக.
2. மன்னர்கள் எவ்வாறு தம் நாட்டை அரசு புரியவேண்டும்?
3. குடிமக்கள் எத்தகைய மன்னரை விரும்புவர்?
4. பொற்கைப் பாண்டியனின் இயல்பு யாது?
5. ஏன் பாண்டியன் அந்தணர் வீட்டுத் திண்ணையில் தினமும் வந்துத் தங்கிச் சென்றான்?
6. பாண்டியன் ஏன் அந்தணர் வீட்டுக் கதவுகளைத் தட்டிச் சென்றான்?
7. பாண்டியனுக்குப் பொற்கைப் பாண்டியன் எனப் பெயர் வரக் காரணம் யாது?

## கட்டுரைப் பயிற்சி

பாண்டிய மன்னனது கை பொற்கையான வரலாற்றைச் சுருக்கி வரைக.

## 12. உயர்ந்த எண்ணமே உன்னத எண்ணம்

உள்ளுவது எல்லாம் உயர்வுஉள்ளல் ; மற்றுஅது
தள்ளினும் தள்ளாமை நீர்த்து.

நம் மனம் பலவாறு எண்ணும் பண்புடையது. அவ்வாறு எண்ணப்படும் எண்ணங்கள் கீழ் நோக்கிச் செல்லக்கூடிய எண்ணங்களாகவும், மேல் நோக்கிப் போகக்கூடிய எண்ணங்களாகவும் இருக்கக்கூடும். ஆனால், நாம் எண்ணும் எண்ணங்கள் மேல் நோக்கிச் செல்லக்கூடிய எண்ணங்களாகவே அமைய வேண்டும். இப்படி எண்ணும் எண்ணங்கள் நம் ஊழ் காரணமாகத் தடைப்பட்டுப்போகும் நிலை ஏற்படினும், அதன் பொருட்டுக் கொண்ட உயர்வான நினைப்புக்களை விட்டொழிக்கக் கூடாது. விடாது உயரிய எண்ணங்களையே உன்னி வருவோமானால், அவ்வெண்ணத்தின் வன்மை, தடையிலாத் தன்மையினைப் பெற்று விளங்கும். இதுவே

வள்ளுவருடைய கருத்துமாகும். நினைப்பவை யாவும் உயர்ந்த நினைப்புக்களாக இருக் கட்டும்; அவ்வுயரிய கருத்துக்கள் ஒவ்



வோரமயம் ஊழ்வலியால் மறைந்து போயி னும், அக்கருத்துக்கள் திரும்பத் திரும்பத்

தோன்றும் வலிமையுடையன என்று அவர் கருதினார். இக்கருத்தினை உலகம் போற்றும் பெரியோராகிய இராமகிருட்டினருடைய வாழ்க்கை வரலாற்றைக் கொண்டும் அறிந்து கொள்ளலாம்.

இராமகிருட்டினர் பரம ஏழைகளாக விளங்கிய அந்தணர் குலத்திற் தோன்றியவர். இவர் ஆயிரத்து எண்ணூற்று முப்பத்து மூன்றாம் ஆண்டில் பிப்ரவரி மாதம் இருபதாம் தேதியில் ஹூக்ளி மாவட்டத்தில் தோன்றிய பெரியோர் ஆவார். இவரது பெற்றோர்கள் ஏழைகளாயினும், நல்ல பண்புகள் பலவும் பெற்றவர்கள். அப்பண்புகள் நம் இராமகிருட்டினரிடம் அமைவதாயின. "தாயைப்போலப் பிள்ளை, நூலைப்போலச் சேலை" என்பது பழமொழியல்லவா! அந்த முறையில் பெற்றோர் பண்பினை இராமகிருட்டினர் பெற்றது பாராட்டுதற்குரியதே யாகும்.

இராமகிருட்டினர் சிறியவராக இருந்த போதே இவர்பால் சில அரிய குணங்கள் குறிப்பாகக் காணப்பட்டன. இவர் தமது முன்னைய பிறப்பின் நிகழ்ச்சிகளை எல்லாம் அறிந்திருந்

தார். இவர் நம் நாட்டில் நல்ல அறிவுரைகளை உணர்த்துவதற்காகவே இறைவனால் அனுப்பப்பட்டவர் என்ற உணர்ச்சியும் அவரிடம் இளமை முதற்கொண்டே இருந்து வந்தது.

இவர் கல்வி பயிலும் பொருட்டுக் கிராமப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பப்பட்டார். ஆனால், இவருடைய மனம் படிப்பில் மிகுதியும் ஈடுபடவில்லை. இதற்கிடையில் இவரது தந்தையாரும் இறந்துவிட்டார். குடும்பப் பொறுப்பும் இவரைத் தொடர்ந்தது. இவர் குடும்பத்தை நடத்த ஒரு வழி காண நேர்ந்தது.

இவர் தட்சணேசுவரத்தில் காளிகோயிலில் பூசாரியாக நியமிக்கப்பட்டார். நாள்தோறும் காளியைப் பூசனை புரிந்துவந்தார். பூசைக்கு வேண்டிய பொருள்களைத் தினமும் திரட்டி, அவற்றைக்கொண்டு ஒழுங்காகப் பூசை செய்துவந்தார். இப்படிச் சில காலம் நடந்தது. இராமகிருட்டினர் எப்போதும் உயர்ந்த நாட்டமே கொண்டவர்; சிந்தனையில்

ஆழ்பவர். ஆதலால், காளியின் உருவத்தி லேயே இவருக்குப் பல ஐயங்கள் உண்டாகி விட்டன. “இந்த உருவம் வெறும் உருவமா ? அன்றி, இவ்வுருவத்தில் உயிரும் உண்டா ?” என்றெல்லாம் நினைக்கத் தொடங்கினர். சிற்சில அமயங்களில் காளியை நோக்கி, “நீ இருக்கின்றுயா ?” என்றுகூடக் கேட்பார். இப்படி எண்ணியும் கேட்டும் இவருக்குப் பதில் ஒன்றும் கிடைக்கவில்லை. இவரது கனவில் காளியின் அருளால் சில கடவுட் காட்சிகள் தோன்றலாயின. ஆகவே இவர் நாள்தோறும் காலை மாலைகளில் பூசைக்குரிய பொருள்களைக் கொண்டு சென்று காளியை வழிபடும் பணியையும் நிறுத்திவிட்டார். அக் கோயிலுக்கு அருகே இருந்த ஒரு காட்டில் ஒரு தனி இடத்தில் அமர்ந்து, கண்மூடிப் பேச்சின்றி இருந்து உண்மை காண முயன் ருர் ; உலகை மறந்தார் ; உணவை மறந்தார். இவர் இவ்வாறு உணவும், உணர்ச்சியும் இன் றிப் பேச்சுமில்லாமல் இருப்பதைக் கண்டவர், இவர் ஒரு பைத்தியக்காரர் போலும் என்று கூட எண்ணிவிட்டனர்.

இவ்வாறு இராமகிருட்டினர் தமது உயரிய நோக்கத்தைப் பெறத் தவம் செய்கையில், ஒரு பெண்மணி இவர் இருக்கும் இடத்தை நாடி வந்தனர். அப் பெண்மணியார் துறவியாவர். அவ்வம்மையார் இவரது உறுதியையும் உண்மையையும் கண்டு, பல நாட்கள் இவரிடமே இருந்து இவருக்கு யோகம் செய்யும் முறைகளைக் கற்றுக்கொடுத்தார்; பின்பு இந்தியாவில் இருந்த பல மதங்களின் உண்மைகளை உரைத்தருளினர். இவை யாவற்றையும் இந்த அம்மையாரிடமே அவர் ஐயம் திரிபற ஓதி உணர்ந்தார். இந்த அம்மையார் சென்றபின் ஒரு பெரிய துறவி வந்து சேர்ந்தார். அவர் இராமகிருட்டினருக்கு மறைகளில் கூறப்பட்ட கருத்துக்களை விளக்கமாக எடுத்து மொழிந்தார். இராமகிருட்டினர் இளமையிற் பயின்ற பள்ளிக்கூடப் படிப்புச் சிறிதே யானுலும், காளிதேவியார் அருளாலும் பெரியோர்களுடைய வருகையாலும் பல ஆண்டுகள் படித்தாலும் அறிந்துகொள்வதற்கு அருமையான கருத்துக்களை அறிந்துகொண்டார்; பேரறிஞராகத் திகழ்ந்தார்.

இராமகிருட்டினர் இளமையில் உலக இன்பத்தில் மிகுதியும் ஈடுபடாமல் கடவுள் வழிபாட்டால் உண்மையைக் காணவேண்டும் என்று அதிலேயே பெரிதும் ஈடுபட்டிருந் ததை அறிந்த இவரது சுற்றத்தார் இவருக்கு இளமையிலே திருமணம் செய்துவைத்தனர். இவ்வாறு இவருக்குத் திருமணம் செய்ததன் நோக்கம், மணமான பிறகேனும், உலக இன் பத்தில் ஈடுபட்டு இல்லறத்தை இனிது நடத் தக்கூடும் என்பதற்காகவே என்க. இவருக்கு மனைவியராக அமைந்தவர் வயதில் மிகச் சிறியவர். அது ஒருவகையில் இராமகிருட்டி னருக்கு நன்மையாக இருந்தது; ஆகவே அவரை விடுத்துத் தம் நோக்கத்தை நிறை வேற்றக் காட்டிற்குப் போய்த் தவம் செய்ய வசதி தந்தது.

அம்மாதரார் வளர்ந்து பெண்மை நலம் வாய்த்தபின் தம் கணவராம் இராமகிருட்டி னர் தவம் செய்திருந்த இடத்தை அடைந்து, அவரது திருவடிகளில் வீழ்ந்து வணங்கிய வண்ணம் இருந்தார். இராமகிருட்டினரது தவப்பயன், காணும் மாதர்கள் அனைவரையும்

உடன்பிறந்தவர்களாகவே கருதும் நிலை யினைத் தந்திருந்தது. ஆகவே அவ்வம்மை யாரும், தம் கணவனாரிடம் தாம் அவரை உலகியலில் ஈடுபடுத்துவதில்லை என்றும், அவரைக் குருவாக எண்ணி, தொண்டு செய்துகொண்டிருப்பதாகவும் உறுதி கூறினர். இவ்வாறு அம்மையார் இராமகிருட்டினருக் குத் தொண்டு புரிந்துவந்தார்.

"பல மதங்கள் உலகில் இருப்பினும் அவைகள் எல்லாம் கடவுள் ஒருவர் உளர், அவரை அடைய உயிர்கள் முயலவேண்டும் என்பதைத்தான் உணர்த்துகின்றன. மக்கள் ஒழுக்கமுடையவராய் நடந்துகொள்ள வேண் டும். மக்களுக்குள் வேறுபாடு இருத்தல் கூடாது; எல்லாரும் ஒன்றே," என்னும் உண்மைகளை இராமகிருட்டினர் பலருக்கும் உணர்த்தி வந்தார். மக்கள் பிறந்து, இறந்து போவதில் பயனில்லை என்ற உயர்ந்த கருத்தி னுல்தான், உலக இன்பத்தை வெறுத்து, உணவை வெறுத்துத் தவம் செய்யலானர். இவர் உன்னிய உயர்ந்த எண்ணம் இறுதி

யில் இவருக்கும் இன்பமே தந்து ஈடேறவும் செய்தது.

இவ்வாறு உயரிய எண்ணங்கொண்டு உண்மைகளைக் கண்ட உத்தமரான இராம கிருட்டினர், கல்கத்தா வந்து சேர்ந்தார். அங்கிருந்து பற்பல இடங்களுக்குச் சென்று தாம் கண்ட உண்மைகளை மக்களுக்கு அறிவு றுத்தி வந்தார். இவரது அறிவுரைகளுக்குப் பலர் செவிசாய்த்து இவருக்குச் சீடர்களாயி னர். அவ்வாறு சீடர்களானவர்கள் பலருள் சிறப்பாக ஆண் இனத்தில் சுவாமி விவேகா னந்தரையும், பெண்கள் இனத்தில் மார்க்கரட் நோபா அம்மையாரையும் குறிப்பிடலாம். இவ்வம்மையாரே நிவேதித்தா என்பவ ராவர்.

இராமகிருட்டினரது அறிவுரை கல்கத்தா வையும் கல்கத்தாவைச் சார்ந்த ஊர்களையும் மட்டும் வசப்படுத்தவில்லை. இந்தியாவிலுள்ள பல பகுதிகளையும் வசப்படுத்தியது. அதனால், பலரும் வந்து அவரை வணங்கித் தம் ஐயங் களை தீர்த்துக்கொண்டு சென்றனர். இவரும் சிறிதும் சளைக்காமல் யார் வந்து கேட்பினும்

அவர்கட்கு இருந்த ஐயங்களையெல்லாம் நீக்கி வந்தார். இப்படி இவர் இடைவிடாமல் அறிவுரை செய்து வந்ததால் இவருடைய தொண்டையில் சதை வளரத் தொடங்கியது. அதையும் பொருட்படுத்தாது, தம் உடலில் பற்று வைக்காது, மக்கள் நல்வழிப்பட்டால் அதுவே போதுமானது என்ற எண்ணத்தினராய் அறிவுரைகளை உரைத்தும், பிறர் வினவிய வினாக்களுக்கு விடை கூறியும் வந்தார்.

இவ்வாறு இவர் இடைவிடாமல் தம் தொண்டினைச் செய்து வந்ததால் இவருடைய உடல் தளர்ச்சியுற்றுச் சோர்வு அடையலாயிற்று. ஆகவே, இராமகிருட்டினர் தம் உடல் மெலிவதைக் கண்டு தம் சீடர்களை நோக்கி, "சீடர்காள்! இனி என் உயிர் என் உடலில் நிற்காது; பிரிந்தே போகும். ஆகவே, நீங்கள் என் அருகிலிருந்து மறைகளிலுள்ள பாக்களை ஓதிய வண்ணம் இருங்கள்," என்றார். அவர்களும், அவரிட்ட கட்டளைப்படி வேதங்களை ஓதிக் கொண்டிருந்தனர். அதனைக் கேட்டுக்கொண்டே இராமகிருட்டினரது உயிர் உடலைவிட்டுப் பிரிந்தது.

அவர் பூதவுடல் விட்டுப் புகழுடல் பெற்ருர். இவ்வாறு இவர் புகழ் பெற்றது எதனுல்? இவர் எண்ணம் உயரிய எண்ணமாக இருந்த தால் அல்லவா! அத்தகைய உயரிய எண் ணங்களையே எண்ணும் நிலை உங்கட்கும் உறுவதாக! இந்நிலை ஏற்படின் கடவுள் அரு ளும் கிட்டும்; பெரியோர்களும் தாமே வந்து அருள் செய்து மீள்வர்.

## பயிற்சி வினுக்கள்

1. 'உள்ளுவதெல்லாம்' என்ற குறட்கு விளக்கம் தருக.
2. நம் எண்ணங்கள் எத்தகையனவாய் இருத்தல் வேண்டும்? ஏன்?
3. இராமகிருட்டினர் ஏன் காளி கோயிலில் பூசை செய்ய நேர்ந்தது?
4. இவருக்கு மறை ஞானமும், யோக ஞான மும் எப்படி வந்தன?
5. இவர் மனைவியார் ஏன் இவருக்குச் சீட ராயினர்?

## கட்டுரைப் பயிற்சி

இராமகிருட்டினருடைய வாழ்க்கை வரலாற் றைச் சுருக்கி வரைக.

# அருஞ்சொற் பொருள்

பக்கம்

5. ஐயப் படாஅது-சந்தேகப்படாமல். அகத்தது - மனத்தில் இருப்பதை.
6. தலம் - இடம்.
7. பேரன்பு - மிகுதியான ஆசை.
8. ஆட்கொள்ளல் - அடிமை கொள்ளுதல்.
9. கொணருமாறு - கொண்டுவருமாறு.
11. ஆ - பசு. இரப்பு - பிறரிடம் சென்றுக் கெஞ்சிக் கேட்பது. இளி வந்தது - இழிவு தருவது.
12. பொழிதல் - பெய்தல்.
13. செவ்வனே - செவ்வையாக அல்லது நேர்மையாக.
14. முட்டுப்பாடு - தட்டுப்பாடு.
15. முடி - தலைமுடி (மயிர்).
17. நீப்பினும் - நீங்கிப்போனாலும். வினை - செயல். மாய்ப்பது - கொல்லுவது.
18. பரிசனம் - பரிவாரம்.
19. குதூகலம் - மகிழ்ச்சி.
20. எழுப்பியது - உண்டாக்கியது.
23. பொய்யாமை - பொய்கூறாதிருத்தல். ஆற்றின்-வாழ்க்கையில் நடத்திக்காட்டினால். பிற அறம்-மற்றைய தரும காரியங்களைக் கூட. செய்யாமை - செய்யாதிருத்தல்.
24. கூறாமை - சொல்லாமை.
25. உற்று - கூர்ந்து.

பக்கம்

27. பூண்டு - மேற்கொண்டு.
29. பெருங்கூச்சல் - பேரொலி.
31. தகைத்து – சிறைப்புடையது.
35. அமர்ந்து - உட்கார்ந்து.
36. முடிசாய்த்து - தலை வணங்கி.
38. மெய்ப்பொருள் - உண்மைப் பொருள்.
40. முகந்து - மொண்டு.
41. சிந்தித்து - யோசித்து.
42. தம்பித்தல் - அசையாதிருத்தல்.
44. அகரமுதல - 'அ' என்னும் எழுத்தை முதலாக உடையன. ஆதிபகவன் - முதன்மையான கடவுள். முதற்று - முதலாக உடையது.
45. இன்னல் - துன்பம்.
46. செவி மடுத்தல் - கேட்டல்.
48. ஏனம் - பன்றி. தருக்கம் - வாக்குவாதம்.
49. சம்மதித்தனன் - இணங்கினன்.
50. அலக்கழித்தல் - அலைத்து வருத்துதல்.
53. இலன் - பொருள் இல்லாதவனாய் உள்ளேன். எவ்வம் - இழிவான (சொல்லை). உரையாமை - சொல்லாதபடி. குலனுடையான் கண்ணே - நற்குடியில் பிறந்தவரிடத்தில்.
55. உறைவிடம் - இருப்பிடம். நாடாது - அணுகாமல்.
56. கடப்பாடு - கடமை. வந்துறும் - வந்து விடும்.
59. சாவடி - வழிப்போக்கர் வந்து தங்குமிடம்.
60. அணுகிவிட்டது - நெருங்கிவிட்டது.

பக்கம்

63. உய்வு - தப்பும் வழி. செய்ந்நன்றி - பிறர் செய்த உதவியை. கொன்ற மகற்கு - மறந்தவனுக்கு.

65. நகைச்சுவை - வேடிக்கை.

68. ஏவல் - பணிவிடை.

69. செஞ்சோற்றுக்கடன் - அரசனிடம் பெற்றுண்ட உணவுக்காக அவன் பொருட்டு வீரன் தன்னுயிரைப் போரிடைக் கொடுத்தலாகிய கடமை.

70. அஃது இலார் - அந்தப் புகழை இல்லாதவர். தோன்றலின் - பிறப்பதை விட. நன்று - நல்லது. நிலைபேறு - நிலைத்து நிற்பது.

73. திகழ்தல் - விளங்குதல். ஐயம் திரிபற - சந்தேகம் சிறிதும் இல்லாதபடி.

74. பிறப்பகம் - (ஒருவன்) பிறந்த ஊர்.

75. போக்கினர் - அனுப்பினர். துய்த்தல் - அனுபவித்தல்.

76. தழைக்க - செழிக்க.

77. இடுகாடு - சுடுகாடு.

78. வெகுமதி - பரிசு.

80. குடி - குடிமக்களை. கோல் ஓச்சும் - செங்கோல் நடத்தும். மா - பெரிய. உலகு - உலக மக்கள்.

81. ஐவகை - ஐந்துவிதமான.

82. பேரவா - மிகுந்த ஆசை. வேற்றுரு-மாறு வேடம்.

83. மீள்வது - திரும்பி வருவது. எண்ணத்தவராய் - எண்ணங்கொண்டவராய்.

பக்கம்

84. அஞ்சற்க - பயப்படாதே. இசைந்தாள் - சம்மதித்தாள். அமைத்திலன் - அமைக்க வில்லை.

85. கருதாது - நினைக்காமல்.

87. நிகழ்ந்தது - நடைபெற்றது.

88. கள்வன் - திருடன். ஆலவாய்ப் பெருமான் - சிவபெருமான்.

90. உள்ளுவது - நினைக்கின்ற எண்ணம். உள்ளல் - நினைப்பாயாக. தள்ளினும் - விதிவசத்தால் கைகூடாமல் போயினும். தள்ளாமை நீர்த்து - ஒழிக்கப்படாத தன்மையுடையதாகும்.

91. ஊழ்வலி - வினைப்பயன்.

93. பூசாரி - கோயிலில் பூசை செய்பவர்.

95. அமயம் - பொழுது. மறை - வேத நூல்.

96. சுற்றத்தார் - உறவினர்.

97. முயலுதல் - முயற்சி செய்தல்.

98. உன்னிய - நினைத்த.

99. வினவிய - கேட்ட. பாக்கள் - பாடல்கள்.

100. கிட்டும் - கிடைக்கும்.

ராம்சந்தர்

சென்னை